# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம்

*(2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2005, பெப்புருவரி மாதம் 11 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 50.50** **தபாற் செலவு : ரூபா 15.00**

## *2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம்*

*[2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆம் அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ –ஒ. 30/2000 / 4697*

## *1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

***1.*** *இச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* *சுருக்கப் பெயர்.*

***2.*** *(இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ்" என்னும் சொற்க ளுக்குப் பதிலாக, "இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.* *1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***3.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2), (3) , (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ்செய்துவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—* *முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*"(2) உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் —*

*(அ) வங்கித் தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற் காக உருவாக்கப்படவுள்ள கம்பெனியொன்றின் விடயத்தில், பின்வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப் படுதல் வேண்டும் :—*

*(i) உருவாக்கப்படவுள்ள கம்பெனியின் வரைவு அமைப்புப் புறவிதிகளினதும் அதன் அமைப் பக விதிகளினதும் அல்லது அதன் வரைவு யாப்பு விதிகளினதும் அல்லது அத்தகைய கம் பெனியின் உருவாக்கத்துடன் உறவுபட்ட வேறு ஏதேனும் ஆவணத்தினதும் பிரதியொன்று ; அத்துடன்*

(ii) பணிப்பாளர்களாக உத்தேசிக்கப்பட்ட ஆட்களினதும் அத்துடன் பிரதான நிறைவேற்று அலுவலர் ஒருவர் அடையாளங் காணப்பட்டால், அத்தகைய அலுவலரதும் பெயர்கள், முகவரிகள், தொழில்கள் மற்றும் தகைமைகள் என்பவற்றைக் கொண்டுள்ள கூற்றொன்று ;

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதன் முன்னர் உருவாக்கப்பட்டதும் வங்கித் தொழிலை ஆரம்பிக்கக் கருதுகின்றதுமான கம்பெனியொன்றின் விடயத்தில், பின்வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் :–

(i) அத்தகைய கம்பெனியின் அமைப்புப் புறவிதிகளினதும் அதன் அமைப்பகவிதிகளினதும் அல்லது யாப்பு விதிகளினதும் அல்லது அத்தகைய கம்பெனியின் உருவாக்கத்துடன் உறவுபட்ட வேறு ஏதேனும் ஆவணத்தினதும் பிரதியொன்று, அத்தகைய ஆவணங்களுக்கு எவையேனும் திருத்தங்கள் பிரேரிக்கப்பட்டிருப்பின் அவற்றோடு சேர்த்து ;

(ii) கம்பெனியின் பணிப்பாளர்களினதும், பெயர் குறித்து நியமிக்கப்பட அல்லது நியமிக்கப்பட உத்தேசிக்கப்பட்ட எவரேனும் பணிப்பாளர்களினதும் மற்றும் அத்தகைய கம்பெனியின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் பெயர்கள், முகவரிகள், தொழில்கள் மற்றும் தகைமைகள் என்பவற்றைக் கொண்டுள்ள கூற்றொன்று; அத்துடன்

(iii) முற்போந்த மூன்று ஆண்டுகளுக்கான கம்பெனியின் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையினதும் இலாப நட்டக் கணக்கினதும் பிரதியொன்று ;

(இ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியினால் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அவ்விண்ணப்பம் செய்யப்படுகின்றவிடத்து, (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் மேலதிகமாக, அத்தகைய கம்பெனி, —

(i) இலங்கையில் அதன் வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதில் அல்லது அது தொடர்பில் உறப்பட்ட எல்லாக் கடப்பாடுகளையும் ஈடுசெய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நிதிகள், மத்திய வங்கியினால் கோரப்படுவதன்மேல், விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய கம்பெனியினால் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஏற்பாடு செய்யப்படுமெனக் கூறுகின்ற அத்தகைய கம்பெனியின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்ட எழுத்திலான பொறுப்பேற்பொன்றையும் ; அத்துடன்

(ii) அத்தகைய கம்பெனி அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு எந்த நாட்டில் கூட்டிணைக்கப்பட்டதோ அந்த நாட்டின் ஒழுங்குபடுத்தும் அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட, பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொண்டுள்ள அறிக்கையொன்றையும்,

சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) பணச்சபையினால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டதன்மேல், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், அது அவசியமென அத்தகைய பணிப்பாளர் கருதுகின்றவிடத்து, உரிமமொன்று வழங்கப்பட வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக வேறு ஆவணங்களை, தகவலை அல்லது வேறு விவரங்களைக் கொடுத்துதவுமாறு விண்ணப் பகாரரைத் தேவைப்படுத்தலாம்.

(4) ஓராம், (2) ஆம் அத்துடன் (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ்ப் பணச்சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், தகவல் மற்றும் விவரங்கள் என்பவற்றைக் கருத்துக்கெடுத்துப் பார்க்கும்போதும் மற்றும் அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய மேலதிக புலன் விசாரணைகளின்மீதும் விண்ணப்பமானது கொள்கை அளவில் அங்கீகரிக்கப்படலாம் எனப் பணச்சபை திருப்திப்படுகின்றவிடத்து, விண்ணப்பகாரருக்குத் தற்காலிக அங்கீகாரக் கடிதமொன்றை வழங்கலாம். தற்காலிக அங்கீகாரக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல், 5 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்றை வழங்குவதன் முன்னர் அத்தகைய கடிதத்தின் நியதிகளின்படி தேவைப்படுத்தப்பட்டவையும் மற்றும் அத்தகைய கடிதத்தில் முறித்துரைக்கப்பட்டவையும் ஆன எல்லா முதனிலை வழிவகைகளையும் விண்ணப்பகாரர் எடுத்தல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தற்காலிக அங்கீகாரக் கடிதம் அக்கடிதத்தில் கூறப்பட்ட காலப்பகுதிக்குச் செல்லு படியுடையதாக இருத்தல் வேண்டும். அத்தகைய காலப்பகுதி எவ்வாறாயினும் அத்தகைய கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சுதல் ஆகாது ; அத்துடன் விதி விலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே அத்தகைய செல்லுபடிக் காலப்பகுதி பணச்சபையினால் எழுத்தில் நீடிக்கப்படலாம்.

(6) நாலாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தற்காலிக அங்கீகாரக் கடிதம் ஒவ்வொன்றினதும் பிரதியையும் (5) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய கடிதத்தின் செல்லுபடிக் காலத்தை நீடித்தமை பற்றிய ஏதேனும் தெரிவிப்பின் பிரதியையும் மற்றும் (7) ஆம் உட்பிரிவின்படி அத்தகைய கடிதத்தின் ஏதேனும் மீளப் பெறுகை பற்றிய கடிதத்தின் பிரதியையும் பணச்சபையானது கம்பெனிகள் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படச் செய்வித்தல் வேண்டும்.

(7) நாலாம் உட்பிரிவின் கீழ்த் தற்காலிக அங்கீகாரக் கடிதம் வழங்கப்பட்டமையானது, எந்தக் கம்பெனி தொடர்பில் அல்லது (இதனகத்துப் பின்னர் "உத்தேசக் கம்பெனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வங்கித் தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக உருவாக்கப்படவுள்ள கம்பெனி தொடர்பில் தற்காலிக அங்கீகாரக் கடிதம் வழங்கப்பட்டுள்ளதோ அக்கம்பெனிக்கு அல்லது உத்தேச கம்பெனிக்கு 5 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்றை வழங்குவதற்குப் பணச்சபையைப் பிணிப்பதாதல் ஆகாது. அத்துடன்

பணச்சபையானது (10) ஆம் உட்பிரிவின்கீழ் அதனால் கொண்டு நடாத்தப்பட்ட புனாய்வுகளின் அடிப்படையில், பின்வரும் ஏதேனும் ஓர் ஏதுவின் மீது அல்லது எவையேனும் ஒன்றுக்கு மேற்பட்ட ஏதுக்களின்மீது அக் கடிதத்தை மீளப்பெறலாம் அல்லது 5 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்றை வழங்குவதைத் தவிர்க்கலாம் :—

(அ) உரிமம் வழங்கப்படுவதற்கு கம்பெனியின் அல்லது உத்தேசக் கம்பெனியின் பொருத்தம்பற்றி பணச்சபை திருப்திப்படாதவிடத்து ;

(ஆ) கம்பெனி அல்லது உத்தேசக் கம்பெனியானது தற்காலிக அங்கீகாரக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகாதவிடத்து ;

(இ) உரிமமொன்றை வழங்குவதற்கான இச்சட்டத்தின் கீழான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாவிடத்து ;

(ஈ) கம்பெனி அல்லது உத்தேசக் கம்பெனியானது, உரிமமொன்றுக்கான விண்ணப்பத்தில் அடங்கியுள்ள ஏதேனும் தகவல் அல்லது அது தொடர்பாகக் கம்பெனியினால் அல்லது உத்தேசக் கம்பெனியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவல் பொய்யானதாக அல்லது பிழையானதாகக் காணப்படுமிடத்து ; அல்லது

(உ) பணச்சபையின் அபிப்பிராயப்படி, 5 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்றை வழங்குதலை இடைநிறுத்துவதனைத் தேவைப்படுத்துகின்ற போதியளவு கணிசமான மாற்றம் நாட்டின் பொருளாதார மற்றும் வங்கித் தொழில் சூழலில் காணப்படுமிடத்து :

ஆயின், எவ்வாறாயினும், பணச்சபை (4) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி விண்ணப்பகாரருக்கு வழங்கப்பட்ட தற்காலிக அங்கீகாரக் கடிதமொன்றை இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி மீளப்பெறுவதன் முன்னர் அல்லது இந்த உட்பிரிவின்கீழ் உரிமத்தை வழங்குவதைத் தவிர்ப்பதெனப் பணச்சபையினால் முடிவொன்று எடுக்கப்படுவதற்கு முன்னர் அத்தகைய மீளப்பெறுகைக்கான அல்லது உரிமம் வழங்குவதைத் தவிர்க்கும் முடிவுக்கான ஏதுக்களைக் கூறி விண்ணப்பகாரருக்கு எழுத்திலான போதிய அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் என்பதுடன், தம்திறம் கூறுவதற்கு அவருக்குச் சந்தர்ப்பமொன்றை அளித்தலும் வேண்டும்.

(8) நாலாம் உட்பிரிவின்கீழ் எந்தக் கம்பெனி அல்லது உத்தேசக் கம்பெனி தொடர்பாக தற்காலிக அங்கீகாரக் கடிதம் வழங்கப்பட்டுள்ளதோ அந்தக் கம்பெனி அல்லது உத்தேசக் கம்பெனி, 5ஆம் பிரிவின்கீழ் உரிமம் வழங்கப்படுவதற்கு முன்னர் வங்கித் தொழிலை ஆரம்பித்தல் ஆகாது. அத்துடன் உரிமம் வழங்கப்படும் முன்னர் கம்பெனியினால் அல்லது உத்தேசக் கம்பெனியினால் வழங்கப்படும் விளம்பரம், முற்பகர்வு, அறிவித்தல் அல்லது வேறு வெளியீடு ஒவ்வொன்றிலும் சட்டத்தின்கீழ் வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்த அதற்கு உரிமம் வழங்கப்படவில்லையெனக் குறித்துரைத்தல் வேண்டும்.

(9) ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுக் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனிக்கு –

(அ) அக்கம்பெனி ஒரு பகிரங்கக் கம்பெனியாக இருந்தாலொழிய ;

(ஆ) அக்கம்பெனியின் அமைப்புப் புறவிதிகள் அதன் முதனிலைக் குறிக்கோளாக, இச்சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறாக வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதென எடுத்துக்காட்டினாலொழிய ; அத்துடன்

(இ) அக்கம்பெனியின் அமைப்புப் புறவிதிகள் இச்சட்டத்துக்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் வகைப்பட்ட அல்லது எல்லா வகைப்பட்ட தொழில்களுக்கும், கம்பெனி கொண்டு நடாத்தக்கூடிய வேறு வகைப்பட்ட தொழில்கள், எவையேனும் இருப்பின், அவற்றை மட்டுப்படுத்துவதாக இருந்தாலொழிய,

5 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்படுதல் ஆகாது.

(10) (அ) பணச்சபையானது, 5 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்றை வழங்குவதன்முன்னர் எந்நேரத்திலும், இலங்கையின் வங்கித் தேவைகள் உட்பட, தேசிய பொருளாதார, வங்கி நலன்களைக் கருத்திற்கொண்டு, உரிமம் வழங்கப்படுவதற்குக் கம்பெனிக்குள்ள அல்லது உத்தேசக் கம்பெனிக்குள்ள பொருத்தம் பற்றி அதனைத் திருப்திசெய்துகொள்ளுவதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய புலனாய்வுகளைக் கொண்டு நடாத்தலாம்.

(ஆ) பந்தி (அ) என்பதன்கீழ்க் கொண்டு நடாத்தப்பட்ட புலனாய்வொன்றில் பணச்சபையானது, கம்பெனியின் அல்லது உத்தேசக் கம்பெனியின் பொருத்தத்துக்கு இயைபான ஏதேனும் கருமம் பற்றியும் அதிலும் குறிப்பாக —

(i) விண்ணப்பகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களினதும் விவரங்களினதும் செல்லுபடி மற்றும் ஏற்கப்படற்பாலதான தன்மை ;

(ii) கம்பெனியின் அல்லது உத்தேசக் கம்பெனியின் நிதி நிலைமை மற்றும் வரலாறு ;

(iii) கம்பெனியின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற அத்தகைய வேறு அலுவலர்கள் அல்லது விடயத்துக்கேற்றாற்போல உத்தேசக் கம்பெனியில் அத்தகைய பதவிகளுக்கு நியமிக்கப்பட உத்தேசிக்கப்பட்ட ஆட்களின் நிதி நிலைமை, அனுபவம் மற்றும் பொருத்தம் ;

(iv) கம்பெனியின் மூலதனத்தின் போதுமாந்தன்மை அல்லது உத்தேசக் கம்பெனியின் சார்பில் விண்ணப்பகாரரால் கொடுத்துதவப்பட்ட தகவலின் அடிப்படையில், போதிய மூலதனத்தைத் திரட்டுவதற்கு உத்தேசக் கம்பெனிக்குள்ள வல்லமை ;

(v) இலங்கையில் தொழிலைக் கொண்டுநடாத்துவதில் உறப்பட்ட சகல கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் மேவுவதற்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அவதானித்து நடப்பதற்கும் கம்பெனிக்கு அல்லது உத்தேசக் கம்பெனிக்குள்ள வல்லமை ;

(vi) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது இச்சட்டத்தின் கீழான உரிமமொன்றுக்கான விண்ணப்பம் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ்க் கொடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுடன் விண்ணப்பகாரர் இணங்கியொழுகுகின்றமை,

பற்றியும் சபையைத் திருப்தி செய்யுமாறு விண்ணப்பகாரரைத் தேவைப்படுத்தலாம்.

(11) இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்று வழங்கப்படவுள்ள கம்பெனியின் அல்லது உத்தேசக் கம்பெனியின் பொருத்தம் பற்றிக் கண்டறிவதற்கான ஏதேனும் விசாரணையின் அல்லது புலனாய்வின் நெறிமுறையின்போது அல்லது அது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட உரிமமொன்றுக்கான விண்ணப்பத்தில் அல்லது வேறு ஆவணத்தில் எவரேனும் ஆள், அவ்வாளின் அறிவுக்கெட்டிய வரை பொய்யான அல்லது ஏதேனும் முக்கிய விவரத்தில் தவறாக வழிநடத்துகின்ற தகவலை அல்லது விவரங்களைச் சமர்ப்பித்தால், அவர் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"உரிமம் வழங்குதல்.

5. (1) வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு ஒரு கம்பெனிக்கு அல்லது உத்தேசக் கம்பெனிக்கு உரிமம் வழங்கப்படலாம் எனப் பணச் சபை திருப்திப்பட்டவிடத்து, பணச்சபையினால் விதிக்கப்படக்கூடியவாறன அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கமைவாக, இலங்கையில் வங்கித் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அக் கம்பெனிக்கு அல்லது உத்தேசக் கம்பெனிக்கு, அமைச்சரின் அங்கீகாரத்துடன் அது உரிமமொன்றை வழங்கலாம்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் பின்வருவனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்—

(அ) அது உள்ளூர் வங்கித் தொழிலுக்கு அல்லது கரை கடந்த வங்கித் தொழிலுக்கு அல்லது அத்தகைய தொழில்கள் இரண்டுக்கும் அதிகாரமளிக்கின்றதா என்பது;

(ஆ) வங்கித்தொழில் எந்த இடத்துக்குள்ளாக அல்லது இடங்களுக்குள்ளாக அல்லது பிரதேசத்துக்குள்ளாக கொண்டுநடாத்தப்படலாமோ அந்த இடம் அல்லது இடங்கள் அல்லது பிரதேசம் ; அத்துடன்

(இ) அத்தகைய உரிமம் எந்த நியதி, நிபந்தனைகளுக்கமைய வழங்கப்பட்டதோ அந்த நியதி, நிபந்தனைகள்.

(3) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் இலங்கையில் அதன் பிரதான தொழிலிடத்திலும் அதன் கிளைகள் ஒவ்வொன்றிலும் துலாம்பரமான ஓர் இடத்தில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் பிரதியொன்றை வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை நீக்கஞ் செய்வது பற்றிய அறிவித்தல்.*

9. (1) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி —

(அ) ஐந்தாம் பிரிவின்கீழ் உரிமம் வழங்கப்பட்டதிலிருந்து ஒன்பது மாதங்களுக்குள்ளாகத் தொழிலைத் தொடங்கத் தவறியுள்ளதென; அல்லது

(ஆ) அதனால் உறப்பட்ட எவையேனும் கடன்களை, அத்தகைய கடன்கள் கொடுபடற்பாலதாக வந்ததன்மேல் செலுத்தத் தவறியுள்ளதென; அல்லது

(இ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கெதிராக நிவாரணத்துக்காக மனுவொன்று அல்லது வழக்கு கோப்பிடப்பட்டுள்ளவிடத்தும், ஏதேனும் வங்கிமுறிவுச் சட்டத்தின்கீழ் அல்லது கடனாளிகளுக்கு நிவாரணம் ஏற்பாடு செய்கின்ற அல்லது கடனாளிகள் தொடர்பான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் ஒழிப்போன் ஒருவன் அல்லது பொருளேற்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரென; அல்லது

(ஈ) வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்தாது ஒழிந்துள்ளதென ; அல்லது

(உ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் பணிப்பை, கட்டளையை அல்லது வேறு தேவைப்பாட்டை மீறியுள்ளதென ; அல்லது

(ஊ) பொய்யான, தவறாக வழிநடாத்துகின்ற அல்லது செம்மையற்ற தகவலை அல்லது ஆவணங்களை பணச் சபைக்குக் கொடுத்துதவியுள்ளதென அல்லது உத்தேசக் கம்பெனியொன்றின் விடயத்தில் உரிமத்துக்கான அதன் விண்ணப்பம் தொடர்பாக உரிமத்துக்கான விண்ணப்பகாரர் அத்தகைய தகவலை அல்லது ஆவணங்களைக் கொடுத்துதவியுள்ளாரென ; அல்லது

(எ) அதன் வைப்பாளர்களின் நலன்களுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய ஒரு முறையில் அதன் தொழிலைக் கொண்டுநடாத்தி வந்துள்ளதென அல்லது கொண்டுநடாத்துகின்றதென,

பணச்சபை திருப்திப்படுகின்றவிடத்து, பணச்சபையானது அத்தகைய வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை நீக்கஞ்செய்யுமென அறிவித்தல் கொடுக்கலாம் என்பதுடன் அத்தகைய அறிவித்தலை அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்குத் தெரியப்படுத்துதலும் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அத்தகைய அறிவித்தல் பெறப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக (1) ஆம் உட்பிரிவின் கீழான நீக்கஞ்செய்யும் அறிவித்தலுக்கெதிராக, 5 ஆம் பிரிவின் கீழ் அதற்கு வழங்கப்பட்ட உரிமம் ஏன் நீக்கம் செய்யப்படுதலாகாது என்பதற்கான காரணங்களைக் கொடுத்து பணச்சபைக்கு எழுத்திலான ஆட்சேபனைகளை முன்வைக்கலாம்.

(3) பணச்சபையானது, (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆட்சேபனையை முன்வைப்பதற்கான இறுதித் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாகவும் அவ்வுட்பிரிவின் கீழ் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள், எவையேனும் இருப்பின், அவற்றைப் பரிசீலித்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் ஆட்சேபனைகளுக்கு ஆதாரமாக அதன் வழக்கை விசாரித்த பின்னரும் நிபந்தனைகளுடனோ நிபந்தனைகள் இல்லாமலோ, (1)ஆம் உட்பிரிவின்கீழ்க் கொடுக்கப்பட்ட அறிவித்தலை மீளப் பெறலாம் அல்லது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை நீக்கஞ்செய்யலாம் ; அத்துடன் அதற்கிணங்க எழுத்தில் வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) ஓராமுட்பிரிவின் கீழ்க் கொடுக்கப்பட்ட அறிவித்தலை மீளப் பெறுவதன் மீது நிபந்தனைகளை விதிப்பதற்கான அல்லது அதன் உரிமத்தை நீக்கஞ் செய்வதற்கான (3) ஆம் உட்பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட பணச்சபையின் முடிவினால் இடருற்ற உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்று, அவ்வுட் பிரிவின்கீழ்க் கொடுக்கப்பட்ட அறிவித்தலானது பெறப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக, அத்தகைய முடிவுக்கெதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(5) இப்பிரிவின் கீழான மேன்முறையீடுகள் சம்பந்தமாக அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் விதிகள் ஆக்கப்படும் வரை, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான மீளாய்வு என்றவகையில் விண்ணப்பங்களை விசாரணை செய்தல் சம்பந்தமாக அந்த உறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் இப்பிரிவின்கீழ் செய்யப்படும் மேன்முறையீடு ஒவ்வொன்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) மேன்முறையீட்டு நீதிமன்றமானது (4) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் மீது எந்த முடிவுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த முடிவை உறுதிப்படுத்

தலாம், நேர்மாறாக்கலாம், திரிபுபடுத்தலாம் அல்லது தள்ளிவைக்கலாம் ; அத்துடன் நீதி நலன்கள் தேவைப்படுத்தக்கூடியவாறான வேறு ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

(7) ஓராமுட்பிரிவுக்குப் பங்கமின்றி, பணச்சபையானது, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி, அது எந்த நாட்டில் கூட்டிணைக்கப்பட்டதோ அந்த நாட்டில், அந்நாட்டின் தோதான அதிகாரியால் அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவினால் அதன் உரிமம் அல்லது தொழிற்படுவதற்கான அதிகாரம் நீக்கஞ்செய்யப்பட்டுள்ளதென அல்லது மீளப்பெறப்பட்டதெனத் திருப்தியடைந்தவிடத்து, இப்பாகத்தின் கீழ் வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை நீக்கஞ்செய்யலாம் என்பதுடன், அதற்கிணங்க வங்கிக்கு அறிவித்தலும் வேண்டும்.

(8) (அ) மூன்றாம் உட்பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் உரிமமொன்றை நீக்கஞ்செய்தலானது —

(i) நாலாம் உட்பிரிவின் கீழ் அத்தகைய நீக்கஞ்செய்தலுக்கு எதிராக வங்கி மேன்முறையீடொன்றை முன்வைக்காதவிடத்து, அத்தகைய மேன்முறையீட்டை முன்வைப்பதற்கான காலப்பகுதி முடிவடைந்ததன்மேல் பயனுடையதாக வருதல் வேண்டும் ; அல்லது

(ii) அத்தகைய நீக்கஞ்செய்தலுக்கெதிராக மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டு, பணச்சபையின் முடிவானது விடயத்துக்கேற்றாற்போல மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அல்லது உயர் நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டதன்மேல் பயனுடையதாக வருதல் வேண்டும்.

(ஆ) ஏழாம் உட்பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் உரிமத்தை நீக்கஞ் செய்தலானது, அவ்வுட்பிரிவின் கீழ் அறிவிப்பு வங்கியினால் பெறப்பட்ட திகதியிலிருந்து பயனுடையதாக வருதல் வேண்டும்.

(9) உட்பிரிவு (8) இன் பந்தி (அ) அல்லது (ஆ) என்பதன் கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினது உரிமத்தை நீக்கஞ்செய்தலானது பயனுடையதாக வந்துள்ளவிடத்து, பணச்சபையானது, இயலக்கூடியளவு விரைவாக, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஒரு தடவை அரசாங்கக் கசெற்றிலும் இலங்கையில் விற்பனையாகும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாள்களில் ஒரு தடவையும் அத்தகைய உரிமத்தின் நீக்கம் பற்றிய அறிவிப்பை வெளியிடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு அதன் (2) ஆம், (3) ஆம் , (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(2) அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் இலங்கைக்குள்ளாகக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் உரிமத்தை நீக்கஞ்செய்தலானது 9 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் பயனுடையதாக வந்துள்ளவிடத்து, அந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியைக் கட்டாயமாக ஒடுக்குவதற்கான நடவடிக்கைகள் இச்சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் உரிமத்தை நீக்கஞ் செய்தலானது 9 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அல்லது 9 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் பயனுடையதாக வந்துள்ளவிடத்து, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் உடனடியாக, 3 ஆம் பிரிவின்

(2)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ்ச் சமர்ப்பிக்கப் பட்ட எழுத்திலான பொறுப்பேற்பைக் கௌரவிக்குமாறும் அத்தகைய பொறுப்பேற்பை வலியுறுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறும் இச்சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இலங்கை தொடர்பாகவும் இலங்கையிலும் வங்கித் தொழிலை முடிவிடுமாறும், அத்தகைய வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) ஒன்பதாம் பிரிவின் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பணச்சபையானது, 9ஆம் பிரிவின் (1) என்னும் உட்பிரிவின் (அ) முதல் (எ) வரையான பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட சந்தர்ப்பங்களுள் ஏதேனும் ஒன்றில், 9ஆம் பிரிவுக்கு இணங்க உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை நீக்கஞ்செய்வதற்கு முற்படாமல், பின்வரும் வழிவகைகளுள் ஏதேனும் ஒன்றை அல்லது பலவற்றை உள்ளடக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம் :-

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி இலங்கையில் அதன் தொழிலை இடைநிறுத்துமாறு அத்துடன் இலங்கைக்குள்ளாகக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் விடயத்தில் பணச்சபை குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்கு உடனடியாக இலங்கைக்கு வெளியே அதன் தொழிலை இடைநிறுத்துமாறு பணித்துக் கட்டளை ஆக்கலாம் :

ஆயின், அத்தகைய இடைநிறுத்தத்துக்கு முன்னர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழிலை இடைநிறுத்தப்போவது பற்றிய, அதற்கான காரணங்களுடன் கூடிய பணச்சபையின் முடிவு பற்றிய எழுத்திலான அறிவித்தல் அத்தகைய வங்கிக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டிய மூன்று வேலை நாட்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்குள்ளாக, வாய்மூலமாகவோ அல்லது எழுத்துவாயிலாகவோ அத்தகைய கருமம் பற்றித் தம்திறம் கூறுவதற்கு வங்கிக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுதலும் வேண்டும் ;

(ஆ) பந்தி (அ) என்பதன் கீழ்த் தொழிலை இடைநிறுத்து மாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளதான உரிமமளிக்கப் பட்ட வர்த்தக வங்கியை, அவ்வங்கியின் எல்லாப் புத்தகங்களையும், பதிவேடுகளையும், சொத்துக்க ளையும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரிடம் கைய ளிக்குமாறு தேவைப்படுத்திக் கட்டளை ஆக்கலாம் ;

(இ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழில் தொடர்பில் சபை அவசியமெனக் கருதக்கூடியவா றான ஏதேனும் நடவடிக்கையை உடனடியாக எடுக்கு மாறு அல்லது எவ்வித நடவடிக்கையையும் எடுப்பதி லிருந்து தவிர்க்குமாறு அல்லது ஏதேனும் செயலை அல்லது விடயத்தைச் செய்யுமாறு அல்லது செய்யாது தவிர்க்குமாறு அத்தகைய வங்கியைத் தேவைப்படுத் திக் கட்டளை ஆக்கலாம் ;

(ஈ) அத்தகைய வங்கியின் தொழிலை முறையாகக் கொண்டுநடாத்துவது தொடர்பாக அத்தகைய வங் கிக்கு ஆலோசனை அளிப்பதற்காகப் பொருத்தமான வரும் தகுதியானவருமான ஓர் ஆளை நியமித்துக் கட்டளை ஆக்கலாம் ;

(உ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் அல்லது வங்கி தொடர்பாக ஏதேனும் பணியை நிறைவேற்றுவதி லிருந்து அவ் வங்கியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது கட்டுப்பாட்டாளரைத் தடை செய்யும் கட்டளையையும் மற்றும் அத்தகைய வங்கியில் அல்லது வங்கி தொடர்பில் அத்தகைய பணிகளைக் கொண்டுநடாத்துவதற்காகப் பொருத்த மானவர்களும் தகுதியானவர்களுமான ஆட்களை நியமிக்கின்றது மான கட்டளையையும் ஆக்கலாம் ;

(ஊ) பணச்சபையினால் அத்தகைய வங்கியின் தொழில் பொறுப்பேற்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு, நிறை வேற்றப்படுவதற்கான அல்லது வங்கியின் தொழி லைக் கொண்டுநடாத்துவதற்காக வேறோர் ஆளுக்கு அவ்வாறு பொறுப்பேற்கப்பட்ட கட்டுப்பாட்டைக் கையளிப்பதற்கான கட்டளையை ஆக்கலாம் ;

(எ) வங்கியின் மூலதனத்தை அதிகரிப்பதற்கு ஒழுங்கு செய்வதன் மூலம் அல்லது பணிப்பாளர் சபையை மீளமைப்பதன் மூலம் அல்லது இவ்விரு வழிவகைகள் மூலம் அத்தகைய வங்கியை மீள ஒழுங்கமைப்பதற்கான கட்டளையை ஆக்கலாம் ;

(ஏ) அவ்வாறு ஒன்றுசேர்வதற்குச் சம்மதிக்கின்ற வேறு ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியுடன் அத்தகைய வங்கியை ஒன்றுசேர்ப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்வதற்கான கட்டளையை ஆக்கலாம் ;

(ஐ) அத்தகைய உரித்தாக்கலுக்குச் சம்மதிக்கின்ற வேறொரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழிலை உரித்தாக்கும் கட்டளையை ஆக்கலாம் என்பதுடன், அத்தகைய உரித்தாக்கலுக்கு VIIIஅ என்னும் பாகத்தின் ஏற்பாடுகள், எந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழில் உரித்தாக்கப்படுகின்றதோ அந்த வங்கி தவணைதவறிய வங்கி ஒன்று என்றாற் போன்றும் எந்த உரிமமளிக்கப்பட்ட வங்கிக்கு அத்தொழில் உரித்தாக்கப்படுகின்றதோ அந்த வங்கி கொள்ளும் வங்கி என்றாற்போன்றும் ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட வழிவகை எதுவும், அவ்வாறு செய்வது வங்கித் தொழில்முறைமையின் நலனுக்கு உகந்தது எனப் பணச்சபை அபிப்பிராயப்படுகின்றவிடத்து, 9 ஆம் பிரிவின் கீழ்ப் பின்னர் நடவடிக்;கை எடுப்பதிலிருந்து பணச்சபையைத் தடைசெய்தல் ஆகாது.

(5) நாலாம் உட்பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட ஏதேனும் வழிவகை பற்றிய எழுத்திலான அறிவித்தல் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும் (4) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது கட்டுப்பாட்டாளர் என்பவர்களுக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வழி

வகைகள் அத்தகைய அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து அல்லது அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தேதியில் இருந்து பயனுடையனவாக வருதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் —

(i) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று வேறொரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றின் அல்லது வேறொரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் கிளையொன்றின் தொழிலை அல்லது தொழிலின் பாகத்தைக் கொள்ளுவதற்கு ;";

(ii) அதன் (ஈ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்வதன் மூலமும் ; மற்றும் (உ) என்னும் பந்தியை அதன் (ஈ) என்னும் பந்தியாக மீள எழுத்திடுவதன் மூலமும் ; அத்துடன்

(iii) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் மீளெழுத்திடப் பட்ட பந்தியை நேரே உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(உ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அல்லது அதன் கிளையொன்று வேறு ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியுடன் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியுடன் ஒன்றுசேர்வதற்கு அல்லது ஒன்றுதிரட்டப்படுவதற்கு ;";

(2) அதன் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவுகளைப் புகுத்துவதன் மூலமும் :-

"(1அ) உட்பிரிவு (1) இன் பந்தி (இ) என்பதன் கீழ் கொள்ளுதல் ஒன்றுக்கான அல்லது (1) என்னும் உட் பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழ் ஒன்றுசேர்தல் அல்லது ஒன்று திரட்டுதல் ஒன்றுக்கான அங்கீகாரத் துக்கான விண்ணப்பமொன்று பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :—

(அ) விடயத்துக்கேற்றாற்போல, கொள்ளுகையின் அல்லது ஒன்றுசேர்தலின் அல்லது ஒன்று திரட்டுதலின் தன்மை பற்றிய கூற்றொன்று ;

(ஆ) விடயத்துக்கேற்றாற்போல, கொள்ளுதலா னது அல்லது ஒன்றுசேர்தலானது அல்லது ஒன்றுதிரட்டுதலானது எந்த உத்தேச உடன் படிக்கையின் கீழ்ப் பயனுறுத்தப்பட வுள்ளதோ அந்த உடன்படிக்கை ஏதேனும் இருப்பின், அந்த உத்தேச உடன்படிக்கையின் பிரதியொன்று ; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்த கைய வேறு விவரங்கள் மற்றும் ஆவணங்கள்.

(1ஆ) உட்பிரிவு (1) (இ) அல்லது 1(உ) அல்லது உட்பிரிவு (1இ) என்பதன் கீழான அங்கீகாரம், அத்தகைய கொள்ளுகை அல்லது ஒன்றுசேர்தல் அல்லது ஒன்றுதிரட்டுதல் பாதுகாப்பான, சிறப்பான மற்றும் நிலையுறுதியுடைய வங்கித்தொழில் முறை மையை மேம்படுத்துவதற்கும் அத்துடன் வங்கித் தொழிலில் நிலவும் நியாயமான போட்டிக்கும் பேருதவிபுரியும் எனவும் பணச்சபை திருப்திப்பட்டா லொழிய வழங்கப்படுதலாகாது. உட்பிரிவு (1இ) என்பதன் கீழ் தனியாள் ஒருவருக்கு அல்லது கூட்டி ணைக்கப்பட்ட குழுவுக்கு கொள்ளுகையொன்றுக்கான அங்கீகாரத்தை வழங்கும்போது பணச் சபையானது விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய தனியாள் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின்

பணிப்பாளர்கள் பொருத்தமானவரும் தகுதியான வருமான ஆட்களா எனத் தீர்மானிப்பதில் 42 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள கட்டளைக் கற்களைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

(1இ) (அ) தனியாள் ஒருவர், பங்காண்மையொன்று அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று, ஒன்றில் நேரடியாகவோ அல்லது நேரடியற்றவிதமாகவோ அல்லது வேறு எவரேனும் தனியாளுடன் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவுடன் கூட்டாகச் செயற்பட்டோ அல்லது நியமந்தர் ஒருவருக்கூடாகவோ அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பணச் சபையினால் கொடுக்கப்பட்ட எழுத்திலான முன் அங்கீகாரம் இல்லாமல், எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் இலங்கைக்குள்ளாகக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் முக்கிய அக்கறையொன்றைக் கொள்ளுதல் ஆகாது.

(ஆ) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, இவ்வுட்பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழான அங்கீகாரம், பணச்சபை பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான நியதிநிபந்தனைகளுக்கமைவாக வழங்கப்படலாம்.

(இ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை மீறியுள்ள எவரேனும் தனியாளின், பங்காண்மையின், ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது நியமந்தரின் பெயரை, வங்கியின் பங்குகளை வைத்திருப்பவராக வங்கி உறுப்பினர்களின் இடாப்பில் பதிதல் ஆகாது.

இந்த உட்பிரிவின் நோக்கத்துக்காக, "கூட்டாகச் செயலாற்றுகின்ற" என்பது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கட்டுப்பாட்டைப் பெறும்விதமாக அல்லது திரட்டும்விதமாக அவ்வங்கியில் முக்கிய அக்கறையைப் பெறுவதில் தீவிரமாக ஒத்துழைப்பதற்கான (விதிமுறைப்பட்டதாயினுஞ்சரி விதிமுறைப்படாததாயினுஞ்சரி) புரிந்துணர்வொன்றைப் பின்பற்றிச்

செயலாற்றுதல் என்று பொருளாகும் "முக்கிய அக்கறை" என்பது வாக்களிக்கும் உரிமைகள் கொண்ட, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் வழங்கப்பட்ட மூலதனத்தில் பத்துவீதத்துக்கு மேலானதை வைத்திருத்தல் என்று பொருளாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) எவரேனும் ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி வங்கித் தொழிலைக் கொண்டுநடாத்துகின்றார் என நம்புவதற்கு மத்திய வங்கியின் ஆளுநருக்கு நியாயமான காரணங்கள் இருக்குமிடத்து ; அத்தகைய ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எதனையும் மீறியுள்ளாரா அல்லது மீறுகின்றாரா எனக் கண்டறியும் நோக்கத்துக்காக அத்தகைய ஆளின் புத்தகங்களையும் கணக்குகளையும் பதிவேடுகளையும் பரிசீலிக்குமாறு, ஆளுநர் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரை அல்லது மத்திய வங்கியின் வேறு எவரேனும் அலுவலரைப் பணிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி தவிர்ந்த கம்பெனி எதுவும், பணச்சபையின் எழுத்திலான முன் அங்கீகாரத்துடன் தவிர, அதன் பெயரின் ஒரு பகுதியாக அல்லது அதன் விவரணத்தில் "வங்கி", "வங்கியாளர்", "வங்கித் தொழில்" என்ற சொற்களுள் எதனையும் அல்லது அவற்றின் பெறுதிகள் அல்லது அவற்றின் ஒலிபெயர்ப்புகள் அல்லது வேறு ஏதேனும் மொழியில் அவற்றுக்குச் சமமான சொற்கள் எதனை

யும் பயன்படுத்துதல் ஆகாது ; அத்துடன் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று அதன் பெயரில் ஒரு பாகமாக அத்தகைய சொற்களுள் ஆகக்குறைந்தது ஒன்றையேனும் பயன்படுத்தினாலொழிய, இலங்கையில் தொழிலைக் கொண்டுநடாத்துதல் ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், "வங்கி", "வங்கியாளர்" அல்லது "வங்கித் தொழில்" என்ற சொல்லை எம்மொழியிலேனும் கொண்டிராத இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று, அதன் பெயரில் அச்சொற்கள் விட்டுவிடப்பட்டுள்ளன என்பது எப்படியிருப்பினும், இலங்கையில் தொழிலைக் கொண்டுநடாத்தலாம்.";

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(3) இப்பிரிவிலுள்ளதெதுவும் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாதலாகாது —

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது அதன்கீழ்க் கொடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுக்கிணங்கத் தாபிக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் ஒரு துணைநிலை நிறுவனம் ;

(ஆ) வங்கிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் ஏதேனும் கழகம் ;

(இ) பணச்சட்டத்தின் 127 ஆம் பிரிவுக்குட்பட்ட வங்கித்தொழில் நிறுவனம் ஒன்றின் அல்லது மத்திய வங்கியின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் ஊழியர்களாகவுள்ள வேலை

யாளர்களின் கழகமொன்றென அல்லது சேர்க்கையொன்றென (138 ஆம் அத்தியாய மான) தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கமொன்று ;

(ஈ) பணச்சட்டத்தின் 127 ஆம் பிரிவில் "வங்கித் தொழில் நிறுவனம்" என்பதன் வரைவிலக் கணத்தின் பந்தி (ஆ) அல்லது பந்தி (ஈ) என்ப தன் நியதிகளின்படி வங்கித்தொழில் நிறுவன மொன்றாக இருக்கும் முகவர் நிலையம், நிறு வனம், ஆள் அல்லது ஆட்கள் குழு ஒன்று ;

(உ) மூன்றாம் பிரிவின் கீழ் அல்லது 76ஆ என்னும் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தற்காலிக அங்கீ காரக் கடிதத்தின் செல்லுபடியான காலப்பகுதி யின்போது ஒரு கம்பெனியின் பெயரைக் கூட்டி ணைக்கும் அல்லது மாற்றும் நோக்கத்துக்காக, (1) ஆம் உட்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட முறையில் சொற்களைப் பயன்படுத்துதல் ;

(ஊ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வர்த்தக வங்கி யொன்றின் பிரதிநிதித்துவ அலுவலகம் .".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படு கின்றது :—

(1) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "கையாளுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கையாளுதல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அதன் (ஈ) என்னும் பந்தியை நேரே உடனடுத்து பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(உ) பணச்சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட முத லீடுகள்.".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "பங்குதாரர்களுக்கும்" என்னுஞ் சொல் அவ்வுட்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் "பங்குதாரர் களுக்கும் மீட்கமுடியாத கடன்பத்திரங்கள் வைத்திருப்போருக்கும் மற்றும் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் அல்லது பிணைப்பொறுப்புக்கள் தொடர்பிலான மீள்கொள்வனவு உடன்படிக்கைகளுக்கும் மீதான அல்லது பணச்சபையினால் தீர் மானிக்கப்படும் அத்தகைய வேறு சொத்துக்களுக்கும்" மீதான அல்லது என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு "கரைகடந்த வங்கித்தொழில் எதுவும்" என்னுஞ் சொற்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக, "76ஈ என்னும் பிரிவின்கீழ் அதிகாரமளிக் கப்பட்டாலொழிய, கரைகடந்த வங்கித்தொழில் எதுவும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு, அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(அ) குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் எவரேனும் வதிவற்றவரிடமிருந்து சேமிப்பு, கால மற்றும் கேள்வி வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், ஆயின், காலவைப்புக்களின் விடயத்தில் அத்தகைய வைப்புக்களின் பெறுமதி பத்தாயிரம் ஐக்கிய நாட்டு டொலர்களுக்குக் குறையாததாக அல்லது வேறு குறித் துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சரிசமமானதாக அல்லது பணச்சபையினால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய கூடுதலான தொகை யாக இருத்தல் வேண்டும் ; ஆயின் கரை கடந்த கூறொன்றில் பேணப்படும் ஏதேனும் கணக்கிலுள்ள நிதிகள் காசோலை மூலம் மீளப் பெறப்படற்பாலன வாதல் ஆகாது ;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், (ஊ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(உ) காசு ஓட்டக் கூற்று ;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு, பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

*"ஐந்தொகையையும் இலாபநட்டக் கணக்கையும் வெளியிடுதல்.*

38. (1) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் இலங்கைக்குள்ளாகக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் அதன் நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர் ஐந்து மாதங்களுக்குள்ளாக, நிதி ஆண்டின் முடிவில் உள்ளவாறான அதன் கணக்காய்வு செய்யப் பட்ட ஐந்தொகையையும் அதன் கரைகடந்த வங்கித் தொழில் உட்பட, இலங்கையிலும் அதற்கு வெளியேயும் அதன் தொழில் தொடர்பில் அத்தகைய நிதியாண்டுக்கான அதன் இலாபநட்டக் கணக்கையும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், அக் காலப்பகுதிக்குள்ளாக இலங்கையில் விற்பனையாகும் சிங்கள, தமிழ், ஆங்கில செய்தித்தாளொன்றில் குறைந்தபட்சம் ஒரு தடவையேனும் வெளியிடுதலும் வேண்டும் அத்துடன் அடுத்து வரும் ஆண்டுக்கான ஐந்தொகையும் இலாபநட்டக் கணக்கும் தயாரிக்கப்பட்டு வெளிக் காட்டி வைக்கப் படும் வரை அதன் தொழிலிடங்கள் ஒவ்வொன்றிலும் துலாம்பரமான இடத்தில் அவற்றை வெளிக் காட்டி வைத்தலும் வேண்டும்.

(2) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், அதன் நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர்

ஐந்து மாதங்களுக்குள்ளாக நிதியாண்டின் முடிவில் உள்ளவாறாக அதன் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையையும் அதன் கரைகடந்த வங்கித் தொழில் உட்பட, இலங்கையில் அதன் தொழில் தொடர்பில் அத்தகைய நிதி ஆண்டுக்கான அதன் இலாபநட்டக் கணக்கையும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், பணிப்பாளரினால் தேவைப்படுத்தப் படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள்ளாக இலங்கையில் விற்பனையாகும் சிங்கள, தமிழ், ஆங்கிலச் செய்தித்தாள்கள் ஒவ்வொன்றில் அத்த கைய ஐந்தொகையையும் அதன் இலாபநட்டக் கணக் கையும் குறைந்தது ஒருதடவையாவது வெளியிடு தலும் வேண்டும், அத்துடன் அடுத்துவரும் நிதி யாண்டுக்கான ஐந்தொகையும் இலாபநட்டக் கணக் கும் தயாரிக்கப்பட்டு வெளிக்காட்டிவைக்கப்படும் வரை அதன் தொழிலிடங்கள் ஒவ்வொன்றிலும் துலாம்பரமான இடத்தில் அவற்றை வெளிக்காட்டி வைத்தலும் வேண்டும்.

(3) பணச்சபையானது, செய்யப்படவேண்டிய எவையேனும் வெளிவிடுகைத் தேவைப்பாடுகள் உட்பட, இப்பாகத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஐந்தொகையினதும் இலாபநட்டக் கணக்கினதும் படிவத்தைக் குறித்துரைக்கலாம் என்பதுடன் அத்த கைய படிவம் குறித்துரைக்கப்பட்டவிடத்து, ஒவ் வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினதும் ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் குறித்து ரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் தயாரிக்கப்படுதலும் வேண்டும்.

(4) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ் வொன்றும் நிதியாண்டு முடிவடைந்த ஆறு மாதங் களுக்குள்ளாக, அதன் தொழிலிடங்கள் ஒவ்வொன் றிலும் துலாம்பரமானவோர் இடத்தில், அடுத்து வரும் நிதியாண்டுக்கான திரட்டிய ஐந்தொகை தயாரிக்கப்பட்டு வெளிக்காட்டி வைக்கப்படும் வரை, அத்தகைய வர்த்தக வங்கியினதும் அத்துடன்

அதன் துணைநிலைக் கம்பெனிகளினதும் இணைப்புக் கம்பெனிகளினதும் அலுவல்களின் நிலைமையை எடுத்துக்காட்டி அத்தகைய நிதி ஆண்டின் முடிவில் உள்ளவாறான திரட்டிய ஐந் தொகையை, வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.'';

(5) விடயத்துக்கேற்றாற்போல, 17 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் அத்துடன் (4) ஆம் உட் பிரிவின் ஏற்பாடுகளும் 46 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளும் ஒரு கம்பெனி உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி யின் ஒரு துணைநிலைக் கம்பெனியா அல்லது ஓர் இணைப்புக் கம்பெனியா என, இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காகத் தீர்மானிப்பதில் ஏற்புடையனவாதல் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப் படுகின்றது :—

“பணிப் பாளராக நியமிக்கப் படுதல் அல்லது தெரிவு செய்யப்படுதல் முதலிய வற்றிற்கான தகுதியீனம்.

42. (1) ஆள் ஒருவர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளராகப் பதவிவகிப்பதற்கு தகுதியானவரும் பொருத்தமானவருமான ஆள் ஒருவராக இருந்தாலொழியவும், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டினால் அவ்வாறு செய்வ திலிருந்து அவர் தடுக்கப்படவில்லையாயினும் அத்தகைய ஆள் அத்தகைய வங்கியின் பணிப் பாளர் ஒருவராக நியமிக்கப்படுதலோ, தெரிவு செய்யப்படுதலோ அல்லது பெயர்குறித்து நியமிக் கப்படுதலோ அல்லது அத்தகைய வங்கியின் பணிப்பாளரொருவராகத் தொடர்ந்திருத்தலோ ஆகாது.

(2) ஓராமுட்பிரிவின் நோக்கத்துக்காக, ஆள் ஒருவர் தகுதியானவரும் பொருத்தமானவருமா எனத் தீர்மானிப்பதில், பின்வரும் விடயங்கள் கவ னத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும் :—

(அ) அத்தகைய ஆள் வங்கித்தொழில், நிதி, வியாபாரம் அல்லது நிருவாகம் என்பவற்

றில் அல்லது வேறு ஏதேனும் இயைபான கற்கைத்துறையில் கல்விசார் அல்லது உயர் தொழில் கல்விசார் தகைமைகளை அல்லது பயனுறு தியான அனுபவத்தைக் கொண்டிருக்கிறார்;

(ஆ) அத்தகைய ஆள் மோசடியை, வஞ்சனையை, நேர்மையீனத்தை அல்லது வேறு ஏதேனும் முறைகேடான நடத்தையை உள்ளடக்குகின்ற ஏதேனும் செயலைப் புரிந்துள்ளார் அல்லது அச்செயல் புரியப்படுவதுடன் தொடர்புபட்டுள்ளார் என பயன்படும் விதமாக, இலங்கையில் அல்லது வெளிநாட்டில் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குபடுத்தற் குழுவின் அல்லது மேற்பார்வை அதிகாரசபையின் உயர் தொழிற் கழகத்தின், ஏதேனும் விசாரணை ஆணைக்குழுவின், நியாயசபையின் அல்லது வேறு குழுவின் காண்பு எதுவும் இல்லாதவர் ;

(இ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வெளிநாட்டில், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால், மேற்பார்வை அதிகாரசபையினால், உயர்தொழிற் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாயசபையினால் அல்லது வேறு குழுவினால் மோசடியை, வஞ்சனையை, நேர்மையீனத்தை அல்லது வேறு இதையொத்த குற்றவியற் செயற்பாட்டை உட்படுத்துகின்ற குற்றச்சாட்டு பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டதன் விளைவாக ஒரு புலனாய்வுக்கு அல்லது விசாரணைக்கு உட்பட்டவராக இருக்கவில்லை என்பது ;

(ஈ) நிதி முகாமை தொடர்பில் புரியப்பட்ட குற்றம் தொடர்பில் அல்லது நல்லொழுக்கப் பிறழ்வை உள்ளடக்கும் ஏதேனும் தவறு

*தொடர்பில் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் அத்தகைய ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்படாதவர் ;*

(உ) *இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அத்தகைய ஆள் கடன்பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவர் அல்லர் அல்லது வங்குறோத்தானவராக வெளிப்படுத்தப்படாதவர் ;*

(ஊ) *இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பை அல்லது கட்டளையை அத்தகைய ஆள் திருப்தி செய்வதற்கு அல்லது ஒரு கடனைத் திருப்பிக் கொடுப்பதற்குத் தவறாதவர் ;*

(எ) *அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் சித்தசுவாதீனமற்றவரென வெளிப்படுத்தப்படாதவர் ;*

(ஏ) *இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஏதேனும் வங்கியில், அல்லது நிதி நிறுவனத்தில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவில் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது வேறு அலுவலர் ஒருவராகச் சேவைபுரிவதிலிருந்து ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையின் கட்டளை மூலம் அகற்றப்படாதவராக அல்லது இடைநிறுத்தப்படாதவராக இருக்கின்றார் ;*

(ஐ) (i) *எந்த வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் உரிமம் இடைநிறுத்தப்பட்டுள்ளதோ அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அந்த வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் ; அல்லது*

(ii) எந்த வங்கி அல்லது நிதிநிறுவனம் ஒடுக்கப்பட்டுள்ளதோ அல்லது ஒடுக்கப்பட்டு வருகிறதோ அல்லது கட்டாயமாக ஒழிக்கப்பட்டு வருகின்றதோ அந்த வங்கியில் அல்லது நிதிநிறுவனத்தில்,

இலங்கையிலுஞ்சரி வெளிநாட்டிலாயினுஞ்சரி அத்தகைய ஆள் பணிப்பாளராக, பிரதான நிறைவேற்று அலுவலராக அல்லது அதிகாரத்திலுள்ள வேறு ஏதேனும் பதவியை வகித்தவராக இல்லாதவர்.

(3) (அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர், அத்தகைய வேறு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி, முதல் கூறப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினது துணைநிலைக் கம்பெனியாகவோர் அல்லது இணைப்புக் கம்பெனியாக இருந்தாலொழிய, வோறோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்படுதல், தெரிவுசெய்யப்படுதல் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுதல் ஆகாது.

(ஆ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் ஊழியர் ஒருவர் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக, அவ்வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படலாம், தெரிவுசெய்யப்படலாம் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படலாம் :-

(i) (இதனகத்துப்பின்னர் "நிறைவேற்றுப் பணிப்பாளர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்பாளர்களாக நியமிக்கப்படும், தெரிவுசெய்யப்படும் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை வங்கியின் பணிப்பாளர்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றை விஞ்சுதலாகாது.

(ii) ஊழியர்கள் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாக நியமிக்கப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமிடத்து அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுமிடத்து, அவர்களுள் ஒருவர் வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும் ; அத்துடன் ஏனையோர் 44அ என்னும் பிரிவின் நோக்கங்களுக்காகத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நிறைவேற்றுப் பணிகளைப் புரியும் வங்கியின் அத்தகைய அலுவலர்களாதல் வேண்டும்.

(iii) வங்கியின் பணிப்பாளர் சபையின் கூட்டமொன்றில் சமுகமாயிருக்கும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் ஆகக்குறைந்தது அரைவாசிக்கு மேற்பட்டோர் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாக இராத உறுப்பினர்களாக இருந்தாலொழிய, அத்தகைய கூட்டத்தில் கூட்டநடப்பெண்ணை அமைப்பதற்குத் தேவைப்படும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையினர் சமுகமாயிருந்தபோதிலும், அப்பணிப்பாளர் சபைக்கூட்டம் முறையாக அமைக்கப்பட்டதாதல் ஆகாது.

(4) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பின்வருவோரின் பெயர், முகவரி, தொழில் என்பன பற்றி வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும் :—

(அ) விடயத்துக்கேற்ப அத்தகைய நியமனம், தெரிவு அல்லது பெயர்குறித்த நியமனஞ் செய்யப்படுவதற்கு முன்னர், வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்பட, தெரிவுசெய்யப்பட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள ஆள் ஒவ்வொருவரினதும்;

(ஆ) விடயத்திற்கேற்ப அத்தகைய நியமனம், தெரிவு அல்லது பெயர்குறித்த நியமனம் செய்யப்பட்டதன்பின்னர்

பதினைந்து நாட்களுக்குள்ளாக, வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்பட்ட, தெரிவு செய்யப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப் பட்ட ஆள் ஒவ்வொருவரினதும் ;

(இ) அத்தகைய ஆள் பொருத்தமானவரும் தகுதியானவரும் அல்லர் என வங்கிக் குத் தெரிந்திருந்தால் அல்லது அத்த கைய பணிப்பாளர் அத்தகைய பணிப் பாளராகப் பதவி வகிப்பதற்கு வேறு வகையில் தகைமையற்றவராக வந் தால் நிகழ்வுகள் பற்றி அது தெரிய வந்ததன் பின்னர் பதினைந்து நாட்க ளுக்குள்ளாக, வங்கியின் பணிப்பாளர் எவரினதும்.

(5) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் (1), (2) மற்றும் (3) ஆகிய உட்பிரிவுகளில் குறித்துரைக் கப்பட்ட கருமங்களைக் கருத்துட்கொண்டு, விடயத் திற்கேற்ப (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளின் உரிம மளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளர் என்ற உத்தேச நியமனத்தை, தெரிவை, அல்லது பெயர் குறித்த நியமனத்தை அங்கீகரிக்கலாம் அல்லது அங்கீகரிக்க மறுக்கலாம், அத்துடன் அவ்வுட்பிரிவின்கீழ் அத்தகைய ஆளின் பெயர் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் முப்பது நாட்க ளுக்குள்ளாக அத்தகைய அங்கீகாரம் அல்லது மறுப்புப் பற்றி, அதற்கான காரணங்களுடன் அது தொடர்புறுத்தும் ஆளுக்கு அறிவித்தலும் வேண் டும்.

(6) இயைபான வங்கியின் பணிப்பாளர் ஒருவ ராக, விடயத்துக்கேற்றாற்போல அவரது உத்தேச நியமனம், தேர்வு அல்லது பெயர் குறித்த நியம னத்தை அங்கீகரிப்பதற்கு (5) ஆம் உட்பிரிவின் கீழ் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் மறுத்ததன் மூலம் இடருற்றவரான ஆளொருவர் (5) ஆம் உட்பிரிவின்கீழ் வங்கியினால் அனுப்பப்பட்ட தெரிவிப்பைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக பணச்சபைக்கு அத்தகைய மறுப்புக்கெதிராக எழுத்திலான

ஆட்சேபனைகளை முன்வைக்கலாம். அத்தகைய ஆட்சேபனையைப் பெற்றதன் மேல், பணச்சபை, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரால் அவரது அறிவிப்பில் கொடுக்கப்பட்ட காரணங்களையும், இடருற்ற கட்சிக்காரரின் ஆட்சேபனைகளையும் மற்றும் விசாரணை செய்வது பிரயோசனமானது என அது அபிப்பிராயப்படும் அத்தகைய வேறு விடயங்களையும் கருத்துக் கெடுத்ததன் பின்னர் ஒன்றில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரால் செய்யப்பட்ட மறுப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும் அல்லது விடயத்துக்கேற்றாற்போல வங்கியின் பணிப்பாளராக அத்தகைய ஆளின் உத்தேச நியமனத்தை, தெரிவை அல்லது பெயர் குறித்த நியமனத்தை அங்கீகரித்தல் வேண்டும்.

(7) ஐந்தாம் அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ், விடயத்திற்கேற்ப எந்த ஆளின் நியமனம், தெரிவு அல்லது பெயர்குறித்த நியமனம் அங்கீகரிக்கப்படவில்லையோ அந்த ஆள் ஒருவரை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, அதன் பணிப்பாளராக நியமித்தலோ தெரிவு செய்தலோ அல்லது பெயர்குறித்து நியமித்தலோ ஆகாது :

ஆயின், (5) ஆம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரத்துக்கென வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு எவ்வாளின் பெயர் சமர்ப்பிக்கப்பட்டதோ அவ்வாள், அவ்வுட்பிரிவின்கீழ் பணிப்பாளரின் முடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் விடயத்திற்கேற்ப வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படலாம், தெரிவு செய்யப்படலாம் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படலாம் ; ஆனால் எவ்வாறாயினும் அவ்வுட்பிரிவின்கீழ் அத்தகைய அங்கீகாரத்தை வழங்க மறுத்து, அதற்கிணங்க வங்கிக்கு அறிவிக்கின்ற விடத்தும் மற்றும் வங்கி அதற்கிணங்க அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்றவிடத்தும், அவ்வாள், வங்கியிடமிருந்து அந்த அறிவித்தலைப் பெற்றதன் மேல் உடனடியாக (6) ஆம் உட்பிரிவின்கீழ்ப் பணச்சபையால் செய்யப்பட்ட முடிவுக்கு அமைவாக, வங்கியின் பணிப்பாளராகப் பதவி வகிக்காதொழிதல் வேண்டும்.

(8) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் (1), (2) அத்துடன் (3) என்னும் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட கருமங்களைக் கருத்திற்கொண்டு, எந்நேரத்திலேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளர் ஒருவராக விடயத்திற்கேற்ப நியமிக்கப்பட்ட, தெரிவுசெய்யப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர் தகுதியானவரும் தகுந்தவருமான ஆள் ஒருவர் அல்லர் என அல்லது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளர் ஒருவராக விடயத்திற்கேற்ப ஆள் ஒருவரின் நியமனம், தெரிவு அல்லது பெயர்குறித்த நியமனம் (3) ஆம் உட்பிரிவின் அல்லது (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றதென திருப்திப்படுகின்றவிடத்து, பணிப்பாளர் பணச்சபைக்கு அறிக்கையொன்றை அனுப்புதல் வேண்டும். பணச்சபையானது அந்த அறிக்கையையும் மற்றும் விசாரணை செய்யப்படுவது நன்மைபயக்கும் என அது அபிப்பிராயப்படும் அத்தகைய வேறு கருமங்களையும் கருத்திற்கொண்டதன் பின்னர், அத்தகைய ஆள் தகுதியானவரும் பொருத்தமானவருமான ஆள் அல்லர் என அல்லது விடயத்திற்கேற்ப அந்த ஆளின் நியமனம், தெரிவு அல்லது பெயர் குறித்த நியமனம் (3) ஆம் உட்பிரிவின் அல்லது (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றதென அது திருப்திப்பட்டால்—

(அ) அத்தகைய பணிப்புக்கான காரணங்களைக் காட்டி அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குள்ளாக அத்தகைய ஆளைப் பணிப்பாளர் பதவியிருந்து அகற்றுமாறு எழுத்தில் வங்கியைப் பணிக்கலாம் ; அத்துடன்

(ஆ) எந்த ஆளின் அகற்றுகை அத்தகைய பணிப்பின் கீழ்த் தேவைப்படுத்தப்படுகிறதோ அந்த ஆளுக்கு அத்தகைய அறிவிப்புடன் அத்தகைய பணிப்பின் பிரதியொன்றையும் சேர்த்து, எழுத்தில் அறிவிக்கலாம்.

அத்துடன் வங்கியானது பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக பணிப்பாளர் பதவியிலிருந்து அத்தகைய ஆளை அகற்றுதல் வேண்டும் என்பதுடன், பணிப்பாளர் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டமை பற்றி எழுத்தில் அவ்வாளுக்கு அறிவித்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய அகற்றுகை பற்றி வங்கியின் பங்குதாரர்களுக்கும் கம்பெனிகள் பதிவாளருக்கும் தெரிவிப்பதற்கு அவசியமாகக்ககூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் அல்லது வங்கியின் அமைப்பக விதிகளில் எது எவ்வாறாயினும் (அ) என்னும் பந்தியின்கீழ் கொடுக்கப்பட்ட பணிப்புக்கிணங்க பணிப்பாளர் ஒருவரை அகற்றுதலானது வங்கியினால் கொடுக்கப்பட்ட அகற்றுகை பற்றிய அறிவிப்பு பணிப்பாளரால் பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பயனுடையதாகவருதல் வேண்டும்.

(9) உட்பிரிவு (8) பந்தி (அ) என்பதன்கீழ் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அத்துடன் உட்பிரிவு (8) பந்தி (ஆ) என்பதன்கீழ் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டுள்ளவரான, அத்தகைய பணிப்பாளராகத் தொடர்ந்து பணியாற்றுகின்ற, பணிப்பாளர் ஒருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்து இலட்சம் ரூபா குற்றப் பணத்துக்கும் —

(அ) வங்கியின் விடயத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய பணிப்புக்கு வங்கி இணங்கியொழுகத் தவறும் ஒவ்வொரு நாளுக்கும் மேலதிகமாக ஓர் இலட்சம் ரூபா குற்றப்பணத்துக்குப் பொறுப்பாதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) வங்கியின் பணிப்பாளரின் விடயத்தில், அத்தகைய குற்றத் தீர்ப்பின் பின்னர் பணிப்பாளராகத் தொடர்ந்திருக்கும் ஒவ்வொரு நாள் தொடர்பிலும், மேலதிகமாக ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணத்திற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(10) ஏட்டாம் உட்பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றியதனால் இடருற்றவரான எவரேனும் ஆள், அவ்வாறு அகற்றப்பட்டமைக்கு எதிராகப் பணச்சபைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் பணச்சபையானது மேன்முறையீட்டைப் பரிசீலித்த பின்னர் ஒன்றில் அத்தகைய அகற்றுகையை உறுதிப்படுத்தலாம் அல்லது அத்தகைய வங்கியின் பணிப்பாளர் ஒருவராக அவரது முன்னைய பதவியில் அவரை மீள நியமிக்குமாறு வங்கிக்குப் புதிய பணிப்புக்களை வழங்கலாம்.

(11) இச்சட்டம் தவிர்ந்த, எழுத்திலான ஏதேனும் சட்டம் ஆள் ஒருவர் வகிக்கின்ற பதவியின் பயனைக் கொண்டு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளராக அவ்வாளை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்கின்றவிடத்து, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் அத்தகைய வங்கியின் பணிப்பாளராக அவ்வாள் நியமிக்கப்படுவதற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(12) பணிப்பாளர்களுக்குள்ள பொறுப்புக்கள் வங்கி அலுவல்களின் முகாமையை மேற்பார்வை செய்வதனையும் உள்ளடக்குதல் வேண்டும்.".

**17.** பின்வரும் புதிய பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 44அ என்னும் பிரி வாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 44அ என்னும் புதிய பிரிவை புகுத்துதல்.

“பிரதான நிறைவேற்று அலுவலர்களும் நிறைவேற்று அலுவலர்களும்.

44அ. (1) பணச்சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான நிறைவேற்றுப் பணிகளை நிறை வேற்றுகின்றவர்களான உரிமமளிக்கப்பட்ட வர்த் தக வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலரும் அத்தகைய வேறு அலுவலர்களும் தகுதியானவர் களும் பொருத்தமானவர்களுமான ஆட்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 42 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், பிரதான நிறை வேற்று அலுவலரும் நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற அத்தகைய வேறு அலுவலர்களும் பொருத்தமானவரும் தகுதியானவருமானவர்களா எனத் தீர்மானிப்பதில், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) நாற்பத்திரண்டாம் பிரிவின் (5), (6), (8), (9) மற்றும் (10) ஆகிய உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், பிரதான நிறைவேற்று அலுவலருக்கும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிறைவேற்றுப் பணிகளைப் புரியும் அலுவலர்க ளுக்கும், அத்தகைய ஆள், எந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பிரதான நிறைவேற்று அலுவல ராக அல்லது நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற அலுவலராக இருக்கின்றாரோ அந்த உரிமமளிக் கப்பட்ட வர்த்தக வங்கிக்கும், அவை உரிமமளிக் கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளர் ஒருவருக்கும் அத்தகைய ஆள் பணிப்பாளராக இருக்கும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும் ஏற்புடைத் தாகுமாற் போன்று, ஏற்புடையனவாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப் படுகின்றது :—

“வங்கி மேற்பார்வைப் பணிப்பாள ருக்குள்ள தத்துவங்கள்.

45. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி யொன்று —

*(அ) அதன் பணவைப்பாளர்களுக்கு அதற்குள்ள கடப்பாடுகளை ஆபத்துக்குட்படுத்தக்கூடிய விதமாக அல்லது அதன் கடப்பாடுகளைச் சமாளிப்பதற்கு வங்கி இயலாதிருக்கும் என்ற விளைவைத் தரக்கூடிய விதமாக, அதன் தொழிலைக் கொண்டு நடத்துவதில் பாதுகாப்பற்ற மற்றும் ஸ்திரப்பாடற்ற பழக்க வழக்கங்களில் ஈடுபட்டுள்ளதென ; அல்லது*

*(ஆ) இச்சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் பணிப்பின், கட்டளையின் ஏற்பாடுகளை அல்லது வேறு தேவைப்பாட்டினை மீறியுள்ளதென அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறியுள்ளதென அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் அபிப்பிராயப்பட வங்கித்தொழில் அல்லது நிதி தொடர்பான எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தை மீறியுள்ளதென அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறியுள்ளதென,*

*வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் திருப்திப்பட்ட விடத்து, அவர், (2) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியை, கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக —*

(i) *அத்தகைய பழக்கவழக்கத்திலிருந்து, மீறுகையிலிருந்து அல்லது தவறுகையிலிருந்து இல்லாதொழியு மாறும் மற்றும் அதனை நிறுத்துமாறும் ;*

(ii) *இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான அத்தகைய வேறு சட்டத்தின், அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு*

விதியின், பணிப்பின், கட்டளை யின் ஏற்பாடுகளுக்கு அல்லது வேறு தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகு மாறு ;

(iii) அத்தகைய பழக்கவழக்கம், மீறுகை அல்லது தவறுகை மூலம் விளைந்த நிலைமைகளைச் சீராக்குவதற்கு அவசிய மான நடவடிக்கையை எடுக்குமாறு,

பணிக்கின்ற கட்டளையொன்றை விடுக்கலாம்.

(2) ஓராமுட்பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளை யொன்று —

(அ) ஈடுபட்டுள்ள பாதுகாப்பற்ற மற்றும் ஸ்திரமற்ற பழக்க வழக்கம் பற்றி அல்லது மீறப்பட்ட அல்லது இணங்கி யொழுகப்படாத இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடு கள் பற்றி அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஒழுங்குவிதியின், பணிப்பின், கட்டளை யின் ஏற்பாடுகள் பற்றி அல்லது வேறு தேவைப்பாடு பற்றிக் குறித்துரைத்தல் வேண்டும் ;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படுதல் வேண் டும் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் ;

(இ) மூன்றாம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்று எப்படியிருப்பி னும், பணச்சபை வேறு வகையாகப் பணித்தாலொழிய, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியிடம் அது சேர்ப்பிக்கப் பட்ட தேதியன்று பயனுடையதாக வருதல் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கட்டளை யொன்றினால் இடருற்ற ஏதேனும் உரிமமளிக்கப் பட்ட வர்த்தக வங்கி, அக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்ட தன்பின்னர் முப்பது நாட்கள் முடிவடைவதற்கு முன்னதாக, பணச்சபைக்கு மேன்முறையீடு செய்ய லாம் ; அத்துடன் பணச்சபையானது மேன்முறை யீடு பெறப்பட்டதன் பின்னர் முப்பது நாட்களுக்குள் ளாக, அத்தகைய கட்டளையை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது நீக்கஞ்செய்யலாம்.

(4) ஒன்பதாம் பிரிவில் உள்ளதெதற்கும் பங்க மின்றியும் மற்றும் (3)ஆம் உட்பிரிவின்கீழ் பணச் சபைக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட் டுள்ளது என்பது எப்படியிருப்பினும், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றுக்கு இணங்கி யொழுகத் தவறுகின்ற உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக் குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவரினால் விளக்கத்தின் மீது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் பத்து இலட்சம் ரூபா குற்றப்பணத்துக்கும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அக்கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஒரு இலட்சம் ரூபா மேலதிகக் குற்றப்பணத்துக்கும் பொறுப் புடையதாதல் வேண்டும் ; ஆயின் (3) ஆம் உட்பிரி வின்கீழ் மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட் டுள்ளவிடத்து, பணச்சபையின் முடிவு உரிம மளிக் கப்பட்ட வர்த்தக வங்கிக்குத் தெரிவிக்கப்படும் வரை நீதிவான் முன்னர் வழக்கு நடவடிக்கைகள் தொடுக் கப்படுதலாகாது.".

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"*(1) வங்கித் தொழில் முறைமையின் ஸ்திரப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக, பணச்சபையானது, உரிமமளிக்கப்பட்ட எல்லா வர்த்தக வங்கிகளுக்கும் அல்லது அவற்றுள் எதற்கும் அல்லது எவற்றுக்கும், அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளின் தொழிலின் ஏதேனும் அம்சம் கொண்டு நடாத்தப்படவேண்டிய முறை தொடர்பாகவும் மற்றும் முற்போந்தவைக்குப் பங்கமின்றி பின்வருவனவற்றைக் குறித்துரைத்தும் அதற்கான காரணங்களுடன் சேர்த்து பணிப்புக்களைக் கொடுக்கலாம் :—*

(அ) *அத்தகைய வங்கியினால் செய்யப்படக்கூடிய அல்லது செய்யப்பட முடியாத முற்பணங்களின் வகுப்பு அல்லது வகுப்புகள் ;*

(ஆ) *பிணைப்பொறுப்புள்ள முற்பணங்கள் தொடர்பில் பேணப்பட வேண்டிய விளிம்புகள் ;*

(இ) *அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஒப்புரவு மூலதனம், ஒதுக்குகள், வைப்புகள் என்பவற்றையும் இயைபான வேறு விடயங்களையும் கவனத்திற்கொண்டு, அத்தகைய வங்கியினால் —*

(i) *ஏதேனும் தனியான கம்பெனிக்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, குழுமத்துக்கு, ஆட்கள் கழகத்துக்கு அல்லது தனியாளுக்கு ;*

(ii) *கூட்டுமொத்தத்தில் :—*

(அ) *தனியாளொருவருக்கு அவரது மிக நெருங்கிய உறவினர்களுக்கு அல்லது அவர் கணிசமான அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனிக்கு அல்லது குழுமத்துக்கு ;*

(ஆ) ஒரு கம்பெனிக்கும் அத்துடன் பின்வருவனவற்றுள் ஒன்றிற்கும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றிற்கும் —

(அஅ) அதன் துணைநிலை நிறுவனங்களுக்கு ;

(ஆஆ) அதன் கொளிக் கம்பெனிக்கு ;

(இஇ) அதன் இணைப்புக் கம்பெனிக்கு ;

(ஈஈ) அதன் கொளிக் கம்பெனியின் துணைநிலை நிறுவனத்துக்கு ;

(உஉ) அத்தகைய கம்பெனி அல்லது துணைநிலை நிறுவனம் அல்லது அதன் கொளிக்கம்பெனி அல்லது அதன் கொளிக் கம்பெனியின் துணைநிலை நிறுவனம் ஒன்று கணிசமான அக்கறையைக் கொண்டிருப்பதான கம்பெனியொன்றுக்கு,

அளிக்கப்படக்கூடிய கடனுதவியின் உச்சத்தொகை ;

(ஈ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் —

(i) ஒரு கம்பெனியினால் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவினால் அல்லது தனியாள் ஒருவரினால் வைத்திருக்கப்படும் ;

(ii) கூட்டுமொத்தத்தில் –

(அ) ஒரு கம்பெனியினாலும் பின்வருவனவற்றுள் ஒன்றினாலும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றினாலும் :–

(அஅ) அதன் துணைநிலை நிறுவனங்களினால் ;

(ஆஆ) அதன் கொளிக் கம்பெனியினால் ;

(இஇ) அதன் கொளிக்கம்பெனியின் துணைநிலை நிறுவகத்தினால் ; அல்லது

(ஈஈ) அத்தகைய கம்பெனி அல்லது அதன் துணைநிலை நிறுவனம் அல்லது அதன் கொளிக்கம்பெனி அல்லது அதன் கொளிக் கம்பெனியின் துணைநிலை நிறுவனம் ஒன்று கணிசமான அக்கறையைக் கொண்டிருப்பதான கம்பெனி ஒன்றினால் ; அல்லது

(ஆ) தனியாள் ஒருவரினாலும் பின்வருவனவற்றுள் ஒன்றினாலும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றினாலும் :-

(அஅ) அவரது நெருங்கிய உறவினர்களினால் ;

(ஆஆ) அவர் கணிசமான அக்கறையைக் கொண்டுள்ள அல்லது அவரது நெருங்

கிய உறவினர் கணிசமானளவு அக்கறையைக் கொண்டுள்ள கம்பெனி ஒன்றினால் ;

(இஇ) அத்தகைய கம்பெனியின் துணைநிலை நிறுவனத்தினால் ;

(ஈஈ) அத்தகைய கம்பெனியின் கொளிக்கம்பெனியினால்;

(உஉ) அத்தகைய கம்பெனியின் கொளிக்கம்பெனியின் துணைநிலை நிறுவனமொன்றினால் ;

(ஊஊ) அத்தகைய கம்பெனி அல்லது அதன் துணை நிலை நிறுவனமொன்று அல்லது அதன் கொளிக் கம்பெனி அல்லது அதன் கொளிக் கம்பெனியின் துணை நிலை நிறுவனம் கணிசமான அக்கறையைக் கொண்டிருப்பதான கம்பெனி ஒன்றினால் ; அல்லது

(எஎ) அத்தகைய தனியாள் அல்லது அவரது மிக நெருங்கிய உறவினர் கணிசமான அக்கறையைக் கொண்டுள்ள கம்பெனியொன்று தவிர்ந்த, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் ; அல்லது

(இ) விடயத்துக்கேற்றாற்போல, தனியாள் ஒருவர் அல்லது கம்பெனி ஒன்று நேரடியாகவோ

மறைமுகமாகவோ அல்லது நன்மை பெறுபவராகவோ எந்தக் கம்பெனி ஒவ்வொன்றிலும் கணிச மான அக்கறையை அல்லது குறிப்பிடத்தக்க முகாமைச் செல் வாக்கைக் கொண்டுள்ளாரோ அல்லது கொண்டுள்ளதோ அந் தக் கம்பெனி ஒவ்வொன்றினா லும், வைத்திருக்கப்படும்,

பங்குமூலதனத்தின் ஆகக்கூடிய நூற்று வீதம்.

இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒரு கம்பெனியின் பங்குகளில் இருபது சதவீதத்துக்குக் குறையாதவையும் ஐம்பது சதவீதத்துக்கு மேற்படாதவையும் இன்னொரு கம்பெனியினால் வைத்திருக்கப்படுமிடத்து, முன்னைய கம்பெனி அந்த மற்றக் கம்பெனியின் "இணைப்புக் கம்பெனி" ஒன்றாகக் கருதப்படுகின்றது.";

(2) அதன் (4) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2), (3), (4) மற்றும் (5) ஆகிய உட்பிரிவு களை நீக்கஞ்செய்துவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :-

"(2) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அதன் சொந்தப் பங்குகளைக் கொள்வனவு செய்வதற் காக கடனுதவி வழங்குதலாகாது அல்லது -

(அ) அதன் சொந்தப் பங்குகளின் ;

(ஆ) அதில் கணிசமான அக்கறை கொண்டுள்ளன வான கம்பெனிகளின் பங்குகளின் ; அல்லது

(இ) பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனிகள் எந்தக் கம்பெனிகளில் கணிசமானளவு அக்கறை கொண்டுள்ளனவோ அந்தக் கம்பெனிகளின் பங்குகளின் ;

பிணைப்பொறுப்புக்கெதிராகக் கடனுதவி வழங்குதலாகாது :

ஆயின், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் நம்பிக்கைப்பொறுப்பாளர்களினால் அல்லது ஊழியர்களினால் வைத்திருக்கப்படும் அல்லது அவர்களின் நன்மைக்காக வைத்திருக்கப்படும் பங்குகளுக்காகச் செய்யப்பட்ட ஒரு கொள்வனையாக அல்லது ஒப்பப் பணமாக இருக்கும், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளைக் கொள்வனை செய்வதற்காக அல்லது அவற்றுக்கு ஒப்பப்பணஞ் செலுத்துவதற்காக, அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் திட்டத்துக்கிணங்க, அந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் செய்யப்படும் பணவகையான ஏற்பாட்டை இப்பிரிவில் உள்ளதெதுவும் தடுப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

ஆயின், மேலும், அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தின் தொகையும் மற்றும் அத்தகைய கடனுதவியின் எவ்வேளையிலும் கொடுக்குமதியாகவுள்ள மொத்த முதற்தொகையும், வங்கியின் ஒப்பமளிக்கப்பட்டுச் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தின் மொத்த முகப்புப் பெறுமதியின் பத்து சதவீதத்தை அல்லது வங்கியின் தடையற்ற மூலதன நிதியங்களின் பத்து சதவீதத்தை இதில் எது அதிகமானதோ, அத்தொகைக்குச் சமமான தொகையினை விஞ்சுதல் ஆகாது.

(3) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று (சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தவிர்ந்த) பணிப்பாளர் சபையை அமைக்கும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோர் அத்தகைய கடனுதவிக்குச் சாதகமாக வாக்களிக்கும் அதன்

பணிப்பாளர் சபையின் கூட்டமொன்றில் அத்தகைய கடனுதவி அனுமதிக்கப்பட்டாலொழிய, அதன் பணிப்பாளர்களுள் எவருக்கும் அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினருக்குக் கடனுதவி எதனையும் வழங்குதலாகாது ; அத்துடன் அத்தகைய கடனுதவி கொடுகடன் அட்டை ஒன்றை வழங்குவதன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, அத்தகைய கடனுதவியானது பணச்சபையினால் காலத்துக் குக்காலம் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்த கைய பிணைப்பொறுப்பினால் பொறுப்பாக்கப்படு தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினரொருவருக்கு வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கடனுதவி, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் காலத்துக் குக் காலம் பணச்சபையினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லையை விஞ்சுதலா காது.

(5) பணச்சபையினால் காலத்துக்குக்காலம் அங்கீ கரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிணைப் பொறுப்புக் கொடுக்கப்பட்டாலொழியவும் மற்றும் சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தவிர்ந்த அதன் பணிப் பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் வாக்குகள்மூலம் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளர் சபையின் கூட்ட மொன்றில் அத்தகைய கடனுதவி அனுமதிக்கப் பட்டாலொழியவும், பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப் படுவதற்கு முன்னராயினுஞ்சரி அதன் பின்னராயி னுஞ்சரி கொள்ளப்பட்ட அக்கறையாக இருக்கும், எந்தத் தாபனத்தில் எவரேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளர் கணிசமான அக்கறையைக் கொண்டுள்ளாரோ அந்தத் தாபனத் துக்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று கடனுதவி எதனையும் வழங்குத லாகாது.”.

(2) அப்பிரிவின் (11) மற்றும் (11அ) என்னும் உட்பிரிவுகளை நீக்கஞ்செய்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூல மும் :—

"(11) மூன்றாம் உட்பிரிவின் கீழ் அல்லது (5) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட கடனுதவி எதுவும் அல்லது அத்தகைய கடனுதவியின் ஏதேனும் பாகம் அல்லது அதன்மீது போகுமதியான ஏதேனும் வட்டி பணச் சபையின் முன்னங்கீகாரமில்லாது குறைக்கப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய அங்கீகாரமில்லாது செய்யப்பட்ட ஏதேனும் குறைத்தல் செல்லுபடியற்றதாதலும் பயனற்றதாதலும் வேண்டும்.

(11அ) ஏதேனும் நிதியாண்டின்போது (3) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் கடனுதவி உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய கடனுதவி அந்நிதியாண்டுக்கான கணக்குகளிலும் அத்தகைய கடனுதவி முழுமையாகச் செலுத்தப்படும்வரை அல்லது பூரணமாகக் கொடுத்துத் தீர்க்கப்படும்வரை, பின்னைய ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கணக்குகளிலும் வெளியிப்படுதல் வேண்டும்.".

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு, "பணச் சபையின்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "வங்கி மேற் பார்வைப் பணிப்பாளரின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீளவிலக்கமிடுதவன் மூலமும் ;

(2) மீளவிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(2) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் கட்டாய ஒடுக்குதலொன்றில் கலைக்குநருடைய பணிகளின் பிரயோகம் தொடர்பாகத் தமக்குத் துணை புரிவதற்காக உயர்தொழில் தகைமைபெற்ற எவரேனும் ஆளின் சேவையை ஈடுபடுத்தலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:—

"(1) இதன்கீழ் தரப்பட்டுள்ள உரிமைக் கோரிக்கைகள் கீழே காட்டப்படும் வரிசைக்கிரமத்தில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பொதுச் சொத்துக்களுக்கெதிராக முந்துரிமை யுடையனவாதல் வேண்டும் :—

(அ) ஒடுக்குதலில் கலைக்குநரால் உறப்பட்ட அவசிய மானவையும் நியாயமானவையுமான செலவுகள் ;

(ஆ) ஒடுக்கும் நடவடிக்கைகள் தொடங்குவதற்கு உடன் முன்னரான மூன்று மாதங்களுக்கான வங்கி அலு வலர்களினதும் ஊழியர்களினதும் ஊதியங்களும் சம்பளங்களும் ;

(இ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியால் அரசாங்கத் திற்கும் உள்ளூரதிகார சபைகளுக்கும் கொடுக்குமதி யான வரிகளும் வீத வரிகளும் வைப்பீடுகளும் ;

(ஈ) மத்திய வங்கிக்குக் கொடுக்குமதியாகவுள்ள கட்ட ணங்களும் வரிமதிப்பீடுகளும் ;

(உ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியுடனான ஏதே னும் கணக்கில் வைப்பிலிடப்பட்ட நிதிகள், ஏதேனும் கணக்கு தொடர்பில் இருபதாயிரம் ரூபா வரையறை யொன்று வரை அதன்மீது திரளும் வட்டி, ஏதேனு மிருப்பின் அவ்வட்டியுடன் சேர்த்து ; அத்துடன்

(ஊ) வேறு வைப்பீடுகள் அவற்றின்மீது திரளும் வட்டி, ஏதேனுமிருப்பின் அவ்வட்டியுடன் சேர்த்து.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76அ என்னும் பிரிவு, அதன் (5) ஆம் உட்பிரிவில், "ஒப்புரவு மூலதனம்" என்பதன் வரைவிலக் கணத்தின் இறுதியில் பின்வரும் சொற்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"அத்துடன் அந்நோக்கத்துக்காக, அவ்வுட்பிரிவில் உரிம மளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று பற்றிய குறிப்பீடு உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி பற்றிய குறிப்பீடொன் றாகக் கருதப்படுதல் வேண்டும்." .

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஆ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஆ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"உரிமத்துக்கான விண்ணப்பம்.*

*76ஆ. இப்பாகத்தின்கீழ் உரிமமொன்றுக்குக் காகச் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்று தொடர்பாக, 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் 1 ஆம் பாகத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று தொடர்பில் அவை ஏற்புடைத்தாகுமாறு போன்று, ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன் அந்நோக்கத்துக்காக, அப்பிரிவில் "வங்கித் தொழில்" பற்றிய ஏதேனும் குறிப்பீடு பணவைப்புக்களைப் பெற்றுக் கொள்வதும் மற்றும் அத்தகைய பணங்களை முதலீடு செய்வதும் கடன் கொடுப்பதுமான தொழில் பற்றிய ஏதேனும் குறிப்பீடாகக் கருதப்படுதல் வேண் டும் என்பதுடன் 5ஆம் பிரிவு பற்றிய ஏதேனும் குறிப்பீடு 76இ என்னும் பிரிவு பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.".*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76இ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 76இ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"உரிமம் வழங்குதல்.*

*76இ. ஐந்தாம் பிரிவின் ஏற்பாடுகள் I ஆம் பாகத்தின்கீழ் உரிமமொன்று வழங்கப்படுதல் தொடர்பாக அவை ஏற்புடைத்தாகுமாறுபோன்று, இப்பாகத்தின்கீழ் உரிமமொன்றை வழங்குவதற்கும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும் ; என்பதுடன், அந்நோக்கத்துக்காக அப் பிரிவில் "வங்கித்தொழில்" பற்றிய ஏதேனும் குறிப்பீடு பணவைப்புகளை ஏற்றுக்கொள்ளும், அத்தகைய பணத்தை முதலீடு செய்யும் மற்றும் கடனாகக் கொடுக்கும் தொழில் பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்." .*

*முதன்மைச் சட்டாவாக்கத்தின் 76ஈ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஈ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப் படுகின்றது :—

*"உரிமமளிக் கப்பட்ட விசேட வங்கியினால் கொண்டு நடாத்தப் படவுள்ள தொழில் வகைகளும் வருடாந்த உரிமக் கட்டணம் செலுத்தலும்.*

76ஈ. (1) இப்பாகத்தின்கீழ் உரிமம் வழங்கப்பட்ட ஏதேனும் கம்பெனி உரிமமளிக்கப்பட்ட "விசேட வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி, உரிமத்தில் வெளிப்படையாகக் குறித்துரைக்கப்பட்ட அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கமைவாக, IV ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொழில் வகைகளைக் கொண்டு நடாத்தலாம்.

(3) பணச்சபையானது, 82 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மூலம் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்தி செய்கின்ற உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை, பணச்சபையினால் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கென உருவாக்கப்பட்ட அத்தகைய கரைகடந்த வங்கித் தொழில் திட்டத்துக் கிணங்க, கரைகடந்த வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி கரைகடந்த வங்கித் தொழிலைக்கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவிடத்து, IV ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு அவை ஏற்புடைத்தாகுமாறு போன்று, ஏற்ற மாற்றங்களுடன், அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(4) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி பணச்சபையின் எழுத்திலான முன் அங்கீகாரத்துடன் தவிர, உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட இடம் தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தில் அதன் தொழிலைக் கொண்டு நடாத்துதல் ஆகாது.

(5) இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ்த் தொழிலைக்கொண்டு நடாத்துகின்ற உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மீறிச் செயலாற்றுவதாகக் கருதப்படுதலாகாது.

(6) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஒவ்வொன்றும் பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான வருடாந்த உரிமக் கட்டணமொன்றை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பணச்சபையானது வெவ்வேறு வகுதிகளைச் சார்ந்த உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கு வெவ்வேறு உரிமக் கட்டணங்களையும் தீர்மானிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஊ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஊ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

*"உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றின் உரிமத்தை நீக்கஞ் செய்தல்.*

76ஊ. (1) ஒன்பதாம் பிரிவின் ஏற்பாடுகள், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று தொடர்பில் அவை ஏற்புடைத்தாகுமாறு போன்று உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஒன்று தொடர்பாகவும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும் ; அத்துடன் அந்நோக்கத்துக்காக, அதன்கண் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கான குறிப்பீடு எதுவும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி தொடர்பான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதன்கண் 5 ஆம் பிரிவு பற்றிய குறிப்பீடு எதுவும் 76இ என்னும் பிரிவு பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன் வங்கித் தொழில் பற்றிய குறிப்பீடு எதுவும் பணவைப்புகளைப் பெறுவதும் அத்தகைய பணங்களை முதலீடு செய்வதும் மற்றும் கடன் கொடுப்பதுமான தொழில் பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவிலுள்ளதெதுவும் 76க என்னும் பிரிவினால் பணச்சபைக்கு அல்லது வங்கி மேற் பார்வைப் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்ட தத்து வங்களை எவ்விதத்திலும் பாதித்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஏ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஏ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :–

"உரிமமளிக் கப்பட்ட விசேட வங்கிக்கு V ஆம், VIஆம் பாகங்கள் ஏற்புடையன வாதல்.

76ஏ. பாகம் V மற்றும் பாகம் VI என்பன வற்றின் ஏற்பாடுடன் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு அவை ஏற்புடைத்தாகுமாறு போன்று உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிக்கு ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையன வாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஒ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஒ என்னும் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின் றது :–

(1) அதன் (ட) (ii) (ஆ) (எஎ) என்னும் உபவாசகத்தை நேரே உடனடுத்துப்பின்னர் பின்வரும் உபசவாசகத்தை இடு வதன் மூலமும் :–

" (ஏஏ) எந்தக் கம்பெனி ஒவ்வொன்றிலும் விடயத் திற்கேற்றாற்போல, தனியாள் ஒருவர் அல் லது ஒரு கம்பெனி ஒன்றில் நேரடியாகவோ மறைமுகமாகவோ கணிசமான அக்கறை அல்லது குறிப்பிடத்தக்க முகாமைச் செல் வாக்கு கொண்டுள்ளாரோ அல்லது கொண் டுள்ளதோ அந்தக் கம்பெனி ஒவ்வொன் றும்.";

(2) அதன் (ந) என்னும் பந்தியை நேரே உடனடுத்துப் பின் வரும் பந்தியை இடுவதன் மூலமும் :–

"(ப) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் மூலதனத்தில் வெளிநாட்டு முதலீட்டின் எல்லை.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஓ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஓ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு, பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகள் பாதுகாப்பற்ற நடைமுறைகளை பின்பற்றுமிடத்தான நடவடிக்கை.

76ஓ. நாற்பத்தைந்தாம் பிரிவின் ஏற்பாடுகள் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் தொடர்பில் ஏற்புடைத்தாகுமாறு போன்று, ஏற்றமாற்றங்களுடன், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் ; அத்துடன் அந்நோக்கத்துக்காக அதன்கண் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி பற்றிய குறிப்பீடொவ்வொன்றும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76க என்னும் பிரிவைத் திருத்துதல்.

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76க என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் —

(அ) "அறுபது நாட் காலப்பகுதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆறு மாத காலப்பகுதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :—

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை நீக்கஞ் செய்தல் வேண்டும், அத்துடன்

(i) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் இலங்கைக்குள்ளாக வங்கி கூட்டிணைக்கப்பட்டவிடத்து அல்லது தாபிக்கப்பட்டவிடத்து, வங்கியின் கட்டாய ஒடுக்கலுக்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய ஒடுக்கலுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும் ;

(ii) வங்கியானது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதாகவிருக்கின்றவிடத்து, 76அ என்னும் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட

உரிமத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வங்கியின் தொழில் கட்டாயமாக மூடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் அலுவல் ஒடுக்கப்படுதலும் வேண்டும், அத்துடன் VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் அத்தகைய கட்டாய மூடுகைக்கு ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதலும் வேண்டும் ;";

(2) அதன் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :–

"(4) இலங்கைக்குள்ளாக கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி தன்னிச்சையாக ஒடுக்கப்படலாம் என்பதுடன் VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் அத்தகைய தன்னிச்சையான ஒடுக்குகைக்கு, ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி 76அ என்னும் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அதன் தொழிலைத் தன்னிச்சையாக மூடிவிடலாம் ;அத்துடன் VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய மூடுகைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ங என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ங என்னும் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில், "76ங என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் பணச்சபையினால் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றவிடத்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :–

"76க என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றின் தொழில் இடைநிறுத்தப்பட்டுள்ளவிடத்து ;" .

முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"இரகசியம் பற்றிய வெளிப் படுத்துகை.

77. (1) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் பணிப்பாளர், முகாமையாளர், அலுவலர் அல்லது அதன் தொழிலில் ஈடுபட்டுள்ள வேறு ஆள் ஒவ்வொருவரும் வங்கியின் சகல கொடுக்கல் வாங்கல்கள், அதன் வாடிக்கையாளர்கள், எவரேனும் ஆளின் கணக்குகளின் நிலை மற்றும் வங்கித் தொழில் தொடர்பான சகல கருமங்களும் தொடர்பாகக் கண்டிப்பான இரகசியத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்பதுடன் எவையேனும் அத்தகைய கருமங்களைப் பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர, வெளிவிடுதலும் ஆகாது :—

(அ) (i) நீதிமன்றத்தினால் ;

(ii) அக் கருமம் எவ்வாள் தொடர்புபட்டதோ அவ்வாளினால்,

அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது;

(ஆ) பணிப்பாளரின், முகாமையாளரின், அலுவலரின் அல்லது வேறு ஆளின் கடமைகளைப் புரிகையில் ; அல்லது

(இ) இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எதற்கும் இணங்கியொழுகுவதற்காக,

(2) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பணிப்பாளர், முகாமையாளர், அலுவலர் அல்லது ஆள் ஒவ்வொருவரும், கடமைகளை ஏற்றுக்கொள்வதன் முன்னர், (1) ஆம் உட்பிரிவுக்கிணங்க கண்டிப்பான இரகசியத்தைக் கடைப்பிடிப்பதற்காகத் தம்மைக் கட்டுப்படுத்தி வெளிப்படுத்துகை ஒன்றில் ஒப்பமிடுதல் வேண்டும்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகள், வழமையான வங்கித்தொழில் நடவடிக்கைமுறைக்கிணங்க வாடிக்கையாளர் ஒருவர் தொடர்பிலான அபிப்பிராயமொன்றை அல்லது விவரமொன்றை வேறொரு வங்கிக்கு, வேண்டுகோளின்மீது கொடுப்பதிலிருந்து ஒரு வங்கியைத் தடைசெய்தல் ஆகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு, அப்பிரிவில் "பணச்சபையின் எவரேனும் உறுப்பினருக்கு" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "பணச்சபைக்கு எதிராக அல்லது பணச்சபையின் எவரேனும் உறுப்பினருக்கு" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றதென்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"*தவறுகள்.*

79. (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவு, 3 ஆம் பிரிவின் (11) ஆம் உட்பிரிவு, 14ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு, 33 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவு, 41 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு அல்லது 47 ஆம் பிரிவின் (12) ஆம் உட்பிரிவு ஆகியவற்றின் கீழ்த் தவறொன்றைப் புரிகின்ற எவரேனும் ஆள், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன் றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப் பகுதிக்கான இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) பதினாறாம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளினது, 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினது அல்லது 77 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழத் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல்

வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது மூன்றாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) மேலே (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறொன்று தவிர்ந்த இச்சட்டத்தின் கீழான வேறு தவறொன்றை புரிகின்ற எவரேனும் ஆள், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இச்சட்டத்தில் வேறுவகையாகத் தண்டனை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது பதினெட்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப் பட்டளவு அல்லது வேறுவகையாகத் தவறொன்றாக அமைவன தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது இச்சட்டத்தின் கீழான ஏதேனும் கட்டளையை, பணிப்பை, தேவைப்பாட்டை, விதியை அல்லது ஒழுங்குவிதியை மீறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ்த் தவ றொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல், ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பதினெட்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையில் ஒரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) எழுபத்தேழாம் பிரிவின் ஏற்பாடுகளை மீறியமைக்காக (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆள் ஒருவருக்கெதிரான எவையேனும் நடவடிக்கை களில், தமது கடமைகளைப் புரிவதில் அல்லது சட்டத் தேவைப்பாடொன்றின் கீழ்த் தாம் செயலாற் றுவதாக நம்பிக்கொண்டு, நல்லெண்ணத்துடன் அத்தகைய ஆள் செயலாற்றினாரென எண்பிப்பது எதிர்வாதமாதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்காக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் பணிப் பாளர், முகாமையாளர், அலுவலர் அல்லது ஊழி யர் ஒருவருக்கெதிரான எவையேனும் நடவடிக்கை களில் அத்தகைய பணிப்பாளரின், முகாமையாள ரின், அலுவலரின் அல்லது ஊழியரின் அறிவு இல்லாமல் அத்தவறு புரியப்பட்டதெனவும் அல்லது அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அத்தகைய பணிப்பாளர், முகாமையாளர், அலுவலர் அல்லது ஊழியர் முறையான விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தாரெனவும் தாபிப்பது பணிப்பாளர், முகாமையாளர், அலுவலர் அல்லது ஊழியர் ஒருவருக்கு எதிர்வாதமாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 79அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 79அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் 'இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, 'பத்து இலட்சம் ரூபாவை' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 83இ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 83இ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"குறித்தசில செயற் திட்டங்களை நடாத்துதல் மீதான தடை.*

83இ. (1) ஆளெவரும், எந்த செயற்றிட்டத்தில் பங்குபற்றுநரொருவர் பணத்தை அல்லது பணவகையிலான பெறுமதியை உதவு தொகையாக வழங்குவதற்கு அல்லது செலுத்துவதற்குத் தேவைப் படுத்தப்படுகின்றதுடன், பங்குபற்றுநரினால் சம்பாதிக்கப்படும் நலன்கள் -

(அ) செயற்றிட்டத்திலுள்ள பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பின்மீது ; அல்லது

(ஆ) செயற்றிட்டத்திலுள்ள பங்குபற்றுநர்களால் செய்யப்பட்ட உதவுதொகைகளின் அதிகரிப் பின்மீது,

பெரும்பாலும் தங்கியுள்ளதோ, அந்தச் செயற் திட்டமொன்றை நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ ஆரம்பித்துவைத்தல், முன்னுதல், ஊக்குவித்தல், விளம்பரம் செய்தல், நடத்துதல், நிதியளிப்புச் செய்தல், முகாமைசெய்தல் அல்லது நெறிப்படுத்துதல் ஆகாது.

இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக —

"பணம்" என்பது, இலங்கையினால் அல்லது ஒரு வெளிநாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்படும், தாபிக்கப்படும், அதிகார மளிக்கப்படும் அல்லது ஏற்றுக்கொள்ளப் படும் பணவகையான அலகு அல்லது செலாவணி இடையீட்டுப் பொருள் ஒன்று எனப் பொருளாகும் ; அத்துடன்

"பணவகையிலான பெறுமதி" என்பது, களஞ் சியப்படுத்தப்பட்ட பெறுமதி, கொடுப்ப னவுச் சாதனம் அல்லது கணக்குக்கான வரவு என்ற வடிவமுட்பட, பணத்தில் மீட்கப்படக்கூடியதாயினுஞ்சரி மீட்கப்பட முடியாததாயினுஞ்சரி, செலாவணி இடையீட்டுப்பொருள் ஒன்று எனப் பொருளாகும் என்பதுடன், தங்கக் குற்றி யையும் தங்கக் கட்டியை உள்ளடக்குதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரின் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற் றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். அத்தவறு வேண்டுமென்று அல்லது அறிந்திருந்தும் அல்லது அச்செயல் வேறெவரேனும் ஆளுக்கு சேதத்தை அல்லது கெடுதியை விளைவிக்கும் எனத் தெரிந்திருந்தும் புரியப்படுமிடத்து, மூன்றாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமான வொரு காலப்பகுதிக்கு கடூழிய மறியற்றண்ட னைக்கும் அத்துடன் இரண்டு மில்லியன் ரூபா அல்லது செயற்திட்டத்திற்குப் பங்குபற்றுநர்கள் பெற்றுக்கொண்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட அல்லது வெளிவிடப்பட்ட இலங்கை நாணயத்தின் கூட்டுமொத்தத் தொகையின் இரண்டு மடங்கு என்பவற்றுள் எந்தத் தொகை கூடுதலானதோ, அந்தத் தொகைக்கு ஆளாதல் வேண்டும்.

(3) ஆளுநரால் அதன் சார்பில் அதிகாரமளிக் கப்பட்ட மத்திய வங்கியின் அலுவலர் ஒருவர் (1)ஆம் உட்பிரிவின் மீறுகையொன்று ஏற்பட் டுள்ளது அல்லது ஏற்படும் சாத்தியமுள்ளது எனத் தகவல் பெறப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய விட யத்தையிட்டுப் புலனாய்வொன்றை நடத்துதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் இப் பிரிவின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுகை யில் எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களை மீறியுள்ளாரா அல்லது மீறுகின்ற சாத்திய முள்ளதா என்பதனை ஆய்ந்தறியும் நோக்கத் திற்காக –

(அ) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தவறு புரியப்படுதல் தொடர்பிலான எவையேனும் செயல்கள் புரியப்படுவதாக நம்புவதற்கான காரணம் அவருக்கிருக்குமிடத்து எவையேனும் வளவுகளினுட் புகுந்து அவ்வளவு களை அல்லது அத்தகைய இடத்தில் வைக்கப் பட்டுள்ள அல்லது பேணப்படும், அத்தகைய செயல்கள் தொடர்பிலான வேறு பதிவேட்டையும் அல்லது ஆவணங்களையும் தேடுகை செய்யலாம் ;

(ஆ) மேலதிகத் தகவலை அல்லது ஆவணங் களைக் கோரலாம் ;

(இ) இலத்திரன் வடிவில் அல்லது கணனியில் பிறப்பிக்கப்பட்ட பார்த்தெழுதுப் படியில் பேணப்படும் பதிவேடுகள் உட்பட எவையேனும் ஆவணங்களை, புத்தகங்களை அல்லது பதிவேடுகளைப் பரிசோதனை செய்யலாம் ;

(ஈ) எவையேனும் ஆவணங்களின், புத்தகங்களின் அல்லது பதிவேடுகளின் அல்லது கணனியில் பிறப்பிக்கப்பட்ட பார்த்தெழுதுப் படியின் பிரதிகளை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தைப் பெறலாம்.

(4) இப்பிரிவின்கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரைத் தடுக்கின்ற அல்லது எதிர்க்கின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(5) தமது அறிவுக்கெட்டிய ஏதேனும் தகவலை அல்லது அத்தகைய செயல்கள் தொடர்பில் அவரது கட்டுக்காப்பில் அல்லது உடைமையில் உள்ளவையான எவையேனும் புத்தகங்கள் அல்லது வேறு பதிவேட்டை அல்லது ஆவணங் களை அல்லது கணனியில் பிறப்பிக்கப்பட்ட பார்த்தெழுதுப்படியைக் கொடுத்துதவத் தவறுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கில் அத்தகைய செயல்கள் தொடர்பிலான எவையேனும் புத்தகங்களிலிருந்து அல்லது பதிவேட்டிலிருந்து அல்லது ஆவணங்களிலிருந்து அல்லது கணனியில் பிறப்பிக்கப்பட்ட பார்த்தெழுதுப் படியிலிருந்து பிரித்தெடுப்புக்கள் சாட்சியத்தில் ஏல் தகவாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்றச் சான்றாதலும் வேண்டும்.

(7) மத்திய வங்கியானது, சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு (3) ஆம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட புலன்விசாரணையொன்றின்போது பெறப்பட்ட ஏதேனும் தகவல்கள், ஆவணங்கள், புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது கணனியில் பிறப்பிக்கப்பட்ட பார்த்தெழுதுப் படிகள் என்பவற்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகைக்காக, ஆளொருவரின் குற்றவழக்கில் அத்தகைய அதிகாரிகளுடன் ஒத்துழைத்தலும் வேண்டும்.

(8) பொலிசுப் பரிசோதகர் ஒருவரின் பதவி வரிசைக்கு மேற்பட்ட பொலிசு அலுவலரொருவரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீதும் மற்றும் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகைக்காக ஆளொருவருக்கெதிராக முதற்தோற்றளவிலான வழக்கொன்று உள்ளதென அது திருப்திப்படுவதன்மீதும், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ்த் தாபிக்கப்பட்ட மேல்மாகாணத்திற்கான கொழும்பில் நடாத்தப்படும் மேல்நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலில் ஈடுபடுவதிலிருந்து அவரைத் தடுக்கின்ற, மறுகட்சியின் றிய கட்டளையொன்றை தவறாளருக்கெதிராக விடுக்கலாம்.

(9) மேல்நீதிமன்றமானது, (8) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று எவ்வாளின்மீது ஆக்கப்பட்டதோ அவ்வாளினால் அல்லது அத்தகைய

கட்டளையினால் பங்கமானமுறையில் பாதிக்கப் பட்ட வேறெவரேனும் ஆளினால் அதற்கெனச் செய் யப்படும் விண்ணப்பத்தின்மீதும், அவசியமென அது கருதக்கூடியவாறான எல்லாத் திறத்தவர் களையும் கேட்டதன் மேலும், அத்தகைய இல்லா தொழிப்பு அல்லது அனுமதி விண்ணப்பகாரரின் சட்டமுறையான தொழிலுக்கு அல்லது சட்டமுறை யான அக்கறைகளுக்கு முறையற்ற ஊறுபாடு ஏற் படுவதைத் தவிர்ப்பதற்கு அவசியமானதென அது திருப்திப்படின், (8)ஆம் உட்பிரிவின்கீழ் அதனால் ஆக்கப்பட்ட கட்டளையை இல்லாதொழிக்கின்ற கட்டளையை ஆக்கலாம் அல்லது, நிபந்தனையு டனோ நிபந்தனை யின்றியோ (8) ஆம் உட்பிரிவின் கீழ்த் தடை செய்யப்பட்ட ஏதேனும் செயலை அனு மதிக்கலாம்.

**39.** இச்சட்டத்தின் சிங்களை, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) ‘கடனுதவி’ என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

“‘கடனுதவி’ என்பது ஏதேனும் கடன், மேலதிகப்பற்று, அல்லது முற்பணம் அல்லது பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பணவசதி அல்லது எதிர்பாராப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கான பொறுப்பு உட்பட, பணச்சபையி னால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான, ஏதேனும் கடனை, மேலதிகப்பற்றை அல்லது முற்பணத்தை அல்லது அத்தகைய வேறு பணவசதியை வழங்கு வதற்கான ஏதேனும் பொறுப்பு என்று பொருளா கும் ;”;

(ஆ) *“மூலதன நிதிகள்” என்பதன் வரைவிலக்கணத்தில் அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்துவிட்டு மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—*

*“(ஆ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் விடயத்தில் ஒப்புரவு மூலதனமும் 76ஒ என்னும் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழான பணிப்புக்களைப் பின்பற்றிப் பேணப்படும் ஒதுக்கு நிதியமும் எனப் பொருளாகும் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி கள் தவிர்ந்த ஒதுக்குகளையும் உள்ளடக்கும் ;”;*

(இ) *“கம்பெனி” என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்துவிட்டு பின்வரும் வரைவிலக்கணத்தை அதற்குப் பதிலாக இடுவதன் மூலமும் :—*

*“கம்பெனி” என்பது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுப் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பெனி எனவும் இலங்கைக்குள்ளாக அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வேறு ஏதேனும் குழு எனவும் பொருளாகும் ;”;*

(ஈ) *“வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்” என்பதன் வரைவிலக்கணத்தை நேரேயுடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—*

*“வைப்பீடு” என்பது வட்டியுடனோ அல்லது வட்டி இன்றியோ ஒரு பணத்தொகை மீளச் செலுத்தப்படும் என்ற நியதிகளின்மீது அல்லது கட்டுப்பணமாக மீளச் செலுத்தப்படும் அத்துடன் ஒன்றில் கேட்கும்போது அல்லது எதிர்காலத்தில் அல்லது கொடுப்பனவைச் செய்கின்ற ஆளினாலும் அல்லது அவர் சார்பிலும் அதனை ஏற்றுக்கொள்ளும் ஆளினாலும் அல்லது அவர் சார்பிலும் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில், தொழில் என்ற வகையில் எவரேனும் ஆளிடமிருந்து ஏற்றுக்கொள்*

ளப்பட்ட ஒரு பணத்தொகையை உள்ளடக்கும் ; ஆயின் பணத்தை ஏற்றுக்கொள்ளுகின்ற ஆள், அவரது வழமையான தொழில் நெறிமுறையின் போது பணம் கடன் கொடுக்கின்ற அல்லது அவ் வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை மூன்றாம் திறத்தவரின் பயன்பாட்டுக்கு அல்லது நன்மைக்குக் கிடைக்கச் செய்கின்ற ஆள் ஒருவராக இருக்க வேண்டும், அத்துடன் அது அட்டவணை II என்பதன் (ல) என்னும் பந்தியிலும் அட்டவணை IV என்பதன் (ஙங) என்னும் பந்தியிலும் ஏற்பாடு செய்யப்பட்ட வாறாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் பணத் தொகையையும் உள்ளடக்கும் ;";

(உ) "கணிசமான அக்கறை" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்துவிட்டுப் பின்வரும் வரைவிலக்கணத்தை அதற்குப் பதிலாக இடுவதன் மூலமும் :–

"கணிசமான அக்கறை" என்பது –

(அ) எந்தப் பங்குகளின் செலுத்தப்பட்ட பெறுமதி கம்பெனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் பத்து வீதத்தை விஞ்சுகிறதோ அந்தப் பங்குகளில், ஒரு கம்பெனி தொடர்பில் வேறொரு கம்பெனியினால் அல்லது தனியாளினால் அல்லது அவரது நெருங்கிய உறவினரால், தனியாகவோ கூட்டாகச் சேர்ந்ததோ பயனுகர் அக்கறையொன்று வைத்திருக்கப்படுதல் அல்லது அத்தகைய கம்பெனியின் சார்பில் தனியாள் ஒருவரால் அல்லது அவரது நெருங் கிய உறவினரால் அல்லது வேறொரு கம் பெனியால் கொடுக்கப்பட்ட செலுத்தப்பட்ட மூலதனத்தின் பத்துவீதத்துக்குக் குறையாத ஒரு பணத்தொகைக்காகக் கொடுக்கப்பட்ட உத்தரவாதமொன்று அல்லது நட்டோத்தர வாதமொன்று இருத்தல் என்று ;

(ஆ) குழுமமொன்று தொடர்பில், குழுமத்தின் எல்லாப் பங்காளர்களினாலும் ஒப்பப்பணஞ் செலுத்தப்பட்ட மொத்த மூலதனத்தின்

பத்துவீதத்துக்கு மேற்பட்ட மூலதனத்தைக் குறித்து நிற்பதாகத் தனியாள் ஒருவரால் அல்லது அவரது நெருங்கிய உறவினரால், தனியாகவோ கூட்டாகச் சேர்ந்ததோ அதன் கண் வைத்திருக்கப்படும் பயனுகர் அக்கறை என்று அல்லது அத்தகைய குழுமத்தின் சார் பில் தனியாள் ஒருவரால் அல்லது அத்தனி யாளின் வாழ்க்கைத்துணையினால், பெற்றோ ரால் அல்லது பிள்ளையினால் அம்மூல தனத்தின் பத்து வீதத்துக்குக் குறையாத ஒரு பணத்தொகைக்குக் கொடுக்கப்பட்ட உத்தர வாதமொன்று அல்லது நட்டோத்தரவாத மொன்று இருத்தல் என்று, பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் IIஆம் அட்டவணை யைத் திருத்துதல்.

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் IIஆம் அட்டவணை, அதன் (ர) என்னும் பந்தியை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ல) ஏதேனும் பணத்தொகை எவ்வாளிடமிருந்து பெறப் பட்டதோ அவ்வாளுடன் பணம் பெற்றுக்கொள்ளப் படும் நேரத்தில் தீர்மானிக்கப்படும் ஒருமுறையில் தொழில்முயற்சியின் இலாபங்கள் அல்லது நட்டங்கள் பங்கிடப்படும் என்ற அடிப்படையில், வங்கித் தொழில் முயற்சியில் முதலீடு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அவ்வாளிடமிருந்து எம்முறை யிலேனும் அல்லது வடிவத்திலேனும் அத்தகைய பணத்தொகையை ஏற்றுக்கொள்ளுதல் ;

(வ) பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகள் மீது, கொள்வனை செய்யப்பட்டதும் உடனடியாக வாங்குநர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்காகப் பண்டங்களைக் கொள்வனை செய்தல், ஆயின், பண்டங்களும் அவற்றின் வழங்குநர்களும் அத்தகைய வாங்குநரால் குறித்துரைக்கப்படுதலும் அத்தகைய பண்டங்கள் எந்த விலையில் வாங்குநருக்கு விற்பனை செய்யப்பட வேண்டுமோ அந்த விலையிலும் பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளும், வாங்குநருக்கு விற்பதற் காகச் சொல்லப்பட்ட பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு வாங்குநருடன் வங்கி உடன்படுகின்ற நேரத்தில் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அட்டவணை யைத் திருத்துதல்.

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அந்த அட்டவணையின் (ஙங) என்னும் பந்தியை நீக்கஞ் செய்வதன் மூலம் அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஙங) ஏதேனும் பணத்தொகை எவ்வாளிடமிருந்து பெறப்பட்டதோ அவ்வாளுடன் பணம் பெற்றுக்கொள்ளப்படும் நேரத்தில் தீர்மானிக்கப்படும் ஒருமுறையில் தொழில்முயற்சியின் இலாபங்கள் அல்லது நட்டங்கள் பங்கிடப்படும் என்ற அடிப்படையில், வங்கியின் தொழில்முயற்சியில் முதலீடு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அவ்வாளிடமிருந்து எம்முறையிலேனும் அல்லது வடிவத்திலேனும் அத்தகைய பணத் தொகையை ஏற்றுக்கொள்ளுதல் ;" அத்துடன் ;

(ஆ) அவ்வட்டவணையின் இறுதியில் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(சச) பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளின்மீது, கொள்வனை செய்யப்பட்டதும் உடனடியாக வாங்குநர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்காகப் பண்டங்களைக் கொள்வனவு செய்தல், ஆயின், பண்டங்களும் அவற்றின் வழங்குநர்களும் அத்தகைய வாங்குநரால் குறித்துரைக்கப்படுதலும் அத்தகைய பண்டங்கள் எந்த விலையில் வாங்குநருக்கு விற்பனை செய்யப்பட வேண்டுமோ அந்த விலையும் பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளும், வாங்குநருக்கு விற்பதற்காக சொல்லப்பட்ட பண்டங்களைக் கொள்வனை செய்வதற்கு வாங்குநருடன் வங்கி உடன்படுகின்ற நேரத்தில் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(ஞஞ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஈடுபடுவதற்கு பணச்சபை அதிகாரமளிக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் தொழில்.".

பேணல் வாசகம்.

***43.*** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட ஏதேனும் அதிகாரசபை எழுத்திலான எந்தச் சட்டத் தினால் அல்லது எந்தச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதோ அந்த எழுத்திலான ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுக்குமிடையே முரண்பாடு காணப்படுவது எப்படியிருப்பினும், அத்தகைய எழுத் திலான சட்டத்தின்கீழ்த் தொடங்கப்பட்டு இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவுறாமலும் பூரணமாகாமலும் இருக்கும் செயல்கள், முடிவுகள் அல்லது விடயங்கள் யாவும், முதன்மைச் சட்டவாக்கத்துக்கு அத்தகைய திருத்தம் எதுவும் இல்லையென் றாற்போன்று கொண்டுநடாத்தப்பட்டுப் பூரணப்படுத்தப்படலாம்.

---

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*